Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1283)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மாசி 19 வெள்ளிக்கிழமை (02.03.2012) பக்கங்கள் 16 ஓசை – 153














# சிவில் நிர்வாகத்திற்கு படையினர் தடை
# சர்வதேச நாடுகளுக்கு சம்பந்தன் கடிதம்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை அரசுக்கு எதிராக பிரச்சாரம் செய்ய ஜெனிவாவுக்கு செல்லாது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அறிவித்ததைத் தொடர்ந்து, கூட்டமைப்புக்குள்ளும் புலம்பெயர் தீவிரத் தேசியர்கள் மத்தியிலும் பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரைத் தமிழ்த் துரோகிகள் என வசைபாடும் கட்டுரைகளும் துண்டறிக்கைகளும் வெளிவந்த வண்ணமுள்ளன. யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் சுமந்திரன் எம்.பி.யின் கொடும்பாவியும் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ்த் தீவிரத் தேசியவாதிகளின் கடும் எதிர்ப்பினைச் சமாளிக்கும் பொருட்டு, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 47 உறுப்பு நாடுகளுக்கும் கடிதமொன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

சிங்கள மக்களின் வெறுப்பைத் தூண்டும் விதமாக கூட்டமைப்பு ஜெனிவாவுக்குச் செல்வது இன்றையநிலையில் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்காது எனத் தெரிவித்த (15 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூரில் முதலை

(யாழ்ப்பாணம்)

புத்தூருக்கும் ஆவரங்காலுக்கும் இடையே 10 ஆம் கட்டை கண்ணாரை அம்மன் கோவில் பகுதியில் சுமார் ஏழு அடி நீளமான முதலை ஒன்று அப்பகுதி பொதுமக்களிடம் வசமாக மாட்டிக் கொண்டது.

நேற்றுக் காலை மேற்படி பகுதியின் மணற்பாங்கான பகுதியில் நடமாடிய குறித்த முதலையை அப்பகுதிப் பொதுமக்கள் படையினரின் உதவியுடன் மடக்கிப் பிடித்து மரப்பலகைப் பெட்டியொன்றில் கட்டிவைத்தனர்.

இதன் பின்னர் குறித்த முதலையை வவுனியாவில் உள்ள வனவிலங்குப் பண்ணையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகின்றது. (03)

# யாழ். பல்கலைக்கழகத்தில் தொங்கும் கூட்டமைப்பு எம்.பி.யின் கொடும்பாவி



கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கொடும்பாவி யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் தூக்கில் தொங்க விடப்பட்டிருக்கிறது. "தமிழின துரோகி சுமந்திரன்'' எனத் தெரிவிக்கும் சுலோக அட்டை ஒன்றும் அக்கொடும்பாவியில் தொங்க விடப்பட்டிருந்தது. சுலோக அட்டையில "போர்க்குற்ற விசாரணை எங்கே?" எனக் கேள்வியும் கேட்கப்பட்டிருக்கிறது.

படையினரதும் பொலிஸாரினதும் பூரண கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக வளவினுள் எவ்வாறு சுமந்திரனின் கொடும்பாவி எடுத்து வரப்பட்டிருக்கிறது என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் தவபாலனிடம் கேட்டபோது, இது பல்கலைக்கழக மாணவர்களினாலேயே நடந்திருக்கிறது என நம்புகிறோம்... என்று தெரிவித்தார். இலகுவில் எடுக்க முடியாத விதத்தில் உயர்ந்த கட்டடத்தில் இந்தக் கொடும்பாவி தொங்க விடப்பட்டிருந்தது.

# முன்னாள் எம்.பி. மீது விசாரணை

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனை விசாரணைக்கு வருமாறு இலங்கை பயங்கரவாத தடுப்பு பிரிவிலிருந்து நேற்று மாலை அழைப்பு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் புலிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தாக குற்றம் சாட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள் தொடர்பாகவும், சமகால அரசியல் நிலைமை தொடர்பாகவும், இவர் தற்போது அங்கம் வகிக்கும், தமிழ்த் தேசிய மக்கள முன்னணி அறிக்கைகள் வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# உலகின் நம்பிக்கையை அரசு இழந்துவிட்டது

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

உலக நாடுகள் பல கோரிக்கை விடுத்துள்ள போதும் அரசு நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல் செய்யத் தவறியுள்ளது. இதனால் உலகின் நம்பிக்கையை அது இழந்து விட்டது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

அத்துடன் ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக கூறியுள்ள நாடுகள் கூறுவதைக் கருத்தில் எடுத்து நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை விரைவாக அமுல்படுத்த வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று ஊடகவியலாளரை சந்தித்த லக்ஷ்மன் கிரியல்ல, இலங்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ள இந்தோனேஷியா, தாய்லாந்து, மலேஷியா அடங்கிய நாடுகள் இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்த வேண்டுமென விரும்புகின்றனர். அதேசமயம் அமெரிக்கா உட்பட வேறு முக்கிய நாடுகளும் இதையே கூறுகின்றன.

முழு உலகமுமே கூறும்போது நாம் ஏன் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுலாக்கி அந்த நாடுகளின் நம்பிக்கையைப் பெறக்கூடாது? என கேட்டார். அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளினால் அது உலகத்தின் நம்பிக்கையை இழந்து விட்டது என கிரியெல்ல கூறினார். 2010 இல் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை இடைக்கால சிபாரிசுகளை அமுலாக்க இலங்கை தவறிவிட்டது. தடுத்து வைக்கப்பட்டவர்களின் விபரங்களை உறவினருக்கு வழங்கவும் அரசாங்கம் தவறிவிட்டது. இடைக்கால அறிக்கை அரச பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் எனவும் கூறியிருந்தது. இதையும் அரசாங்கம் செய்யவில்லை என அவர் கூறினார்.

# சமுர்த்தி வங்கிச் சேவை முல்லைத்தீவில் அறிமுகம்

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைத் தவிர ஏனைய 22 மாவட்டங்களிலும் சமுர்த்தி வங்கிச் சேவை உள்ள நிலையில் நேற்று முல்லைத்தீவில் சமுர்த்தி வங்கிச் சேவை ஆரம்பிப்பதற்காகக் கலந்துரையாடல் செயலமர்வு இடம்பெற்றது.

இச் செயலமர்வு முல்லைத்தீவு அரச அதிபர் பணிமனையில் இடம்பெற்றது. இதில் இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் வாழ்வாதாரத் திட்டப் பணிப்பாளர் மா.நடேசராசா, இலங்கை சமுர்த்தி அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் இப்றாஹிம் அலியார், முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன், மேலதிக அரச அதிபர் சி.ஏ. மோகன்ராஸ் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு பிரதேச செயலர்கள் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதேவேளை இன்று கிளிநொச்சியிலும் நாளை மன்னாரிலும் சமுர்த்தி வங்கிச் சேவை அறிமுகப்படுத்தலுக்கான கலந்துரையாடல் செயலமர்வு இடம்பெறும். (04)

# பாம்பு தீண்டியதால் இளம் யுவதி பலி

(சாவகச்சேரி)

பாம்பு தீண்டியதால் இளம் யுவதி ஒருவர் மரணமடைந்து விட்டார். சாவகச்சேரி கச்சாய் வீதியில் நேற்று முன்தினம் இரவு 7.00 மணிக்கு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த மகிந்தன் தீபா (வயது-21) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

வீட்டின் வெளிப் பக்கத்திற்கு வந்தபோது யுவதியின் காலில் பாம்பு தீண்டியது. உடனே சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அவர் எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை 9.00 மணிக்கு உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எஸ்)

# வடக்கில் தாய் சேய் நலத்தை மேம்படுத்த உபகரணங்கள் கையளிப்பு

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தினால் தாய் சேய் நலத்தை மேம்படுத்தும் மருத்துவ உபகரணங்கள் வடமாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வு வடமாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நடைபெற்றது. வடமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்காக 50 மில்லியன் ரூபா பெறுமதியான இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இந்த உபகரணங்களை யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்காக ஆளுநரினால் சுகாதார சேவைகள் (15 ஆம் பக்கம் பார்க்க)

# மோட்டார் சைக்கிள் சாகசம் பார்வையாளர்களை வியக்க வைத்தது

(யாழ்ப்பாணம்)

உலகப்புகழ் பெற்ற மோட்டார் சைக்கிள் சாதனை வீரர் கிறிஸ் பி.'.வி.'.யரின் மயிர்க்கூச்செறியும் மோட்டர் சைக்கிள் சாகச நிகழ்வை பெருமளவிலான யாழ். மக்கள் திரண்டு வந்து வியப்புடன் பார்த்து மகிழ்ந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கின் முன்பாக பிரதான வீதியில் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் இவர் தனது மோட்டார் சைக்கிளில் பல்வேறு சாகச நிகழ்வுகளை நிகழ்த்திக் காட்டினார். சுமார் அரைமணி நேரத்திற்கும் கூடுதலாக இவர் அந்த சாகச நிகழ்வை நிகழ்த்தி யாழ். மக்களை வியப்பில் ஆழ்த்தினார்.



இந்நிகழ்வினை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் ஆகியோரும் நிகழ்விடத்திற்கு வருகைதந்து சாகச நிகழ்வைக் கண்டுகளித்ததுடன், சாகச வீரருக்கு தமது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

மேலும் இச்சாகச நிகழ்வைப் பார்வையிட வந்திருந்த பார்வையாளர்களைக் கட்டுப்படுத்துவதற்கு பெருமளவு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

உள்ளூர் வெளியூர் புகைப்படப் பிடிப்பாளர்கள், செய்தியாளர்கள் சாகச வீரரின் சாகச நிகழ்வைப் பதிவுசெய்வதிலும் முண்டியடித்தனர். (பா)

# பெண் மீது பஸ் வண்டி மோதல்

(யாழ்ப்பாணம்)

வீதியின் ஓரமாக நடந்து சென்ற வயோதிபப் பெண் மீது மோதிய தனியார் பேருந்து சாரதி கவனிக்காமல் பேருந்தை எடுத்துச் சென்ற சம்பவம் நேற்று இடம் பெற்றது.

யாழ். பிரதான வீதியில் மக்கள் வங்கிக்கு அருகில் நேற்று மாலை 3.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

குறித்த வீதியின் ஓரமாக நடந்த பெண்ணை பின்புறமாக மோதி விழுத்திய தனியார் பேருந்து அவசர அவசரமாக அங்கிருந்து தப்பித்துச் சென்றுவிட்டது.

யாழ். நகரில் வாகனங்களுக்கு இடைவிலகும் வாகனங்கள் இவ்வாறு விபத்துக்களை ஏற்படுத்தி விட்டு தப்பிச்செல்லும் சம்பவங்கள் அதிகமாக இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# வட்டுக்கோட்டையில் இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகியம்மன் ஆலய கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயங்களின் வருடாந்த உற்சவங்களை முன்னிட்டு வருடந்தோறும் இடம்பெறும் இரத்ததான நிகழ்வு இம்முறையும் வட்டு - மூளாய் வீதியில் நாளை மறுதினம் காலை இடம்பெறவுள்ளதனால் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு இரத்ததானம் செய்ய விரும்பும் அடியார்கள் யாவரையும் கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினரும் தொண்டர் சபையினரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

GIVE BLOOD GIVE LIFE

# இலக்கியப் போட்டி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கடந்த 2010, 2011 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய கலை இலக்கிய போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி யாழ். செயலக கேட்போர் கூடத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 15பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் இப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்றவர்களுக்கு இந்நிகழ்வில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது. (120)

# கோட்டக்கல்வி அலுவலர் பதவிக்கான விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட ஆகக்குறைந்த 3 வருட காலமேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடைய இலங்கை அதிபர் சேவை 1 அல்லது இலங்கை அதிபர் சேவை 2-1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலங்கை அதிபர் சேவை 1 இல் பொருத்தமானவர்கள் தெரிவுசெய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை அதிபர் சேவை 2-1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை இரு பிரதிகளில் பூர்த்திசெய்து எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ஆ.ராஜேந்திரன், வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## விக்கிரகம் பிரதிஷ்டை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விநாயகர் ஆலயத்தில் நாளைமறுதினம் காலை 7.00 மணி முதல் 9.30 மணிவரையுள்ள சுபநேரத்தில் ஸ்ரீசாயி கணபதி விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

# ஊடகத்துறை டிப்ளோமா யாழ். பல்கலையில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தமிழ் ஊடகத்துறையில் தொழில்சார் பயிற்சி நெறியினை வழங்கி வருகின்ற யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் முழுநேர டிப்ளோமா பயிற்சி நெறியின் 5 ஆவது பிரிவினை ஆரம்பிக்கின்றது. இப் பயிற்சி நெறிக்கு இந்த வருடம் 29 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வினூடாக மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். 2012/2013 ஆம் ஆண்டுக்கான 2 வருடங்கள் கொண்ட இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறியானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற ஒரு பயிற்சி நெறியாகும்.

சர்வதேச ஊடகவியலாளர்களை வளவாளர்களாகக் கொண்டு தொழில்சார் பயிற்சிகளையும், ஊடக நிறுவனங்களில் தொழிற் பயிற்சியையும் தமிழ்நாட்டில் மேலதிக பயிற்சியையும் உள்ளடக்கியதாக இந்தப் பயிற்சி நெறி நடைபெறுகின்றது.


முதல் தடவையாக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் இக்கற்கை நெறியை கற்பதற்கு இணைத்துக்கொள்ளப்படுகின்றனர். இவர்களுக்கான பயிற்சி நெறியானது எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மற்றும் கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானக்குமாரன் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பயிற்சி நெறிக்கான பதிவுகளை இன்று முதல் 9 ஆம் திகதி வரை இல 84, யாழ். ஜும்மா பள்ளி லேனில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## இணுவிலில் உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று உரும்பிராய் திருக்குமரன் B பிரிவும் மானிப்பாய் றெட் றேஞ்சர் அணியும் மோதுகின்றன. (120)



வடமாகாணத்திலுள்ள 33 பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் விளையாட்டு உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வு ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நேற்று முன்தினம் யாழ். ஆளுநர் உப செயலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகவும், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், மாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை மற்றும் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.


## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் ஊழியர் திரு. சிறிதரன்
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி கந்தசாமி விசாலாட்சி
அவர்கள் 01.03.2012 அன்று
சிவபதமடைந்தமையையிட்டு
துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தினைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

(C/1311)

தலைவர்
ஆளுநர் சபை,
உத்தியோகத்தர்கள்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (TRRO)



## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1285)

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1305)


## ஏகாதசி உற்சவம்

(குருநகர்)

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் ஏகாதசி விரத பூசை பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9.00 மணிக்கு சிறப்புச் சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீமத் நாராயணர் பூமாதேவி, ஸ்ரீதேவி சமேதராக வீதியுலா எழுந்தருள்வார். மதியம் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும். (68)

## போக்குவரத்துக்கு தற்காலிக தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான பெருந் துடுப்பாட்டத்தினை முன்னிட்டு மார்ச் மாதம் 8,9,10 ஆம் திகதிகளில் இராஜேந்திர பிரசாத் வீதி மூடப்பட்டிருக்கும் என்பதனை பாவனையாளருக்கு அறியத்தருகின்றேன்.

குறித்த வீதிப் பாவனையாளர்கள் மாற்று வழியைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறேன் என்று யாழ். மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

**துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்து விடாதே!**
- பெஞ்சமின் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## சதகூறாய்த் துளைத்திட்ட அணுவிலும்...

சக்தி உனைக் கோடி முறை தொழுவேன் என்றும், எங்கெங்கு காணினும் சக்தியடா என்றும் பாரதியும் அவன் தாசனும் உணர்ச்சி வசமாகிப் போற்றிப் பரவியதன் பொருள் இன்று மேலும் பல விளக்கங்களை நமக்குத் தருகிறது. பாரை இயக்குகிற சக்தி பராசக்தி ஆனாலென்ன பரிதியின் சுடரானால் என்ன? நம்மை இயங்க வைப்பதே தெய்வம் என்றாகி விடுகிறது.

எது இல்லையேல் இன்று நமது இயக்கமெல்லாம் நின்றுவிடும் என்று நிலைமை இருக்கிறதோ அதற்கே நம் வாழ்க்கையில் இறைக்குரிய இடம் கிடைத்துவிடுகிறது. அன்பு வற்றிவிட்ட சமயங்களிலும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறோம் ஆனால் எரிபொருள் மூலங்கள் வற்றிப்போய் விட்டால்தான் இனி மனிதர்கள் வாழ்வது கஷ்டம் என்று தோன்றுகிறது.

எரிபொருள் விலை ஏற்றப்பட்டால், வாழ்வாதாரத்திற்குத் தேவையான அனைத்தினது விலைகளும் கிடுகிடுவென்று ஏறிவிடுகின்றன என்பதைச் சமீபத்திலும் பார்த்தோம். எது இல்லாவிட்டால், இன்று எமது வாழ்வின் இயக்கங்களெல்லாம் நின்றுவிடுமோ அந்த மின் சக்தியும் அருந்தலாகி விடுகிறது. எரிபொருள் சக்தியின் செலவினத்தைக் குறைத்து நம் சக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இன்று அனல், அணு உலைகளே சாத்தியவழி என்றாகிவிட்டது.

ஆனால் அதிலுள்ள சிக்கல், அணு மின்சார உற்பத்தி மிகுந்த ஆபத்தானது; உயிரைக் குடிக்கக்கூடியது என்கிற நடைமுறை உண்மையாகும். அனைத்துவிதமான மின் உற்பத்திகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இப்போதைக்கு அணு மின் உற்பத்தியில்தான் ஆபத்து அதிகம் என்பதை மறுக்க முடியாது. அணுக்கழிவுகளை என்ன செய்வது என்ற கேள்வியும் பெரிய கேள்வியே. அணுக் கதிர்வீச்சைக் கட்டுப்படுத்த முடியுமா; பெரும் தவறு நேர்ந்துவிட்டால் அந்த விபத்தின் விபரீதம் எப்படி இருக்கும் போன்ற கேள்விகள் இருந்தாலும், நாமும் அனல் தாண்டி அடுத்த கட்டமாக அணுவுக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படவே போகிறது.

அனல் மின் நிலையங்களாலும் நீர், நிலம், காற்று மாசுபடும் சுற்றுச்சூழல் ஆபத்து உண்டு. எப்படிப்பட்ட அனல் மின் நிலையமாக இருந்தாலும் புகை வெளியே வரும். கரித்தூள், புகை, சாம்பல் ஆகியவை காற்றைத் தொடர்ந்து மாசுபடுத்தும்.

புனல் (நீர்) மின் நிலையங்களுக்காக அணைகளைக் கட்ட வேண்டியிருப்பதால், பெருமளவு நிலப்பரப்பு அழிக்கப்பட்டு, அங்குள்ள மக்கள் இடம் பெயர்க்கப்படுகின்றனர். மேலும் இவற்றால் கிடைக்கும் மின்சாரம், அனல், அணு மின் நிலையங்கள் உருவாக்குவதைவிடக் குறைவாகவே இருக்கும். ஆண்டு முழுதும் ஒரே அளவிலும் இருக்காது. மழைவீழ்ச்சி குறைந்தாலும் அதோகதி!

புனல், அனல், அணு இந்த மூன்றைத் தவிர வேறு எந்த வழியிலும் பெருமளவு மின்சாரத்தை ஒரே இடத்தில் தயாரிக்க முடியாது. காற்றாலை, சூரிய ஒளி, கடலலை ஆகிய வழிகள் ஆபத்தற்றவை என்றாலும் மின் தேவைக்குப் போதுமாக இராது. தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டிய அளவுக்கு அதன் உற்பத்தி வலுவைக் கூட்ட நம் போன்ற நாடுகளுக்கு செலவு கட்டுப்படியாகாது.

சூரிய ஒளி மின்சாரம் என்பது எளிதானதொரு விஷயமல்ல. உற்பத்தி பொதுவாக 25 மெகாவாட் அளவில் தான் இருக்கும். வெகு சில இடங்களில்தான் 100, 200 மெகாவாட் என்ற நிலையை அடைய முற்பட்டுள்ளனர். இவற்றை அமைக்க வேண்டிய இடமும் வெகு அதிகம். மக்களே வசிக்காத பாலைவனத்தில்தான் இது சாத்தியம். அனல், அணு மின் நிலையங்கள் சுலபமாக 3000 மெகாவாட் அல்லது அதற்குமேல் என்று சக்தி தருவன.

எதிர்காலத்தை மனத்தில் வைத்துப் பார்த்தால், சூரிய ஒளி மின்சாரம்தான் சரியானது பாதுகாப்பானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அதைச் சாதிக்க நமக்கு மேலும் பொருளாதார வளம் வேண்டும். நம் போன்ற நாடுகள் அந்தப் பொருளாதாரத் தகுதியைப் பெற்றுக் கொள்ளவே இன்னும் பல வருடங்கள் செல்லும்.

அதை நோக்கிச் செல்வதற்கான இடைக்கால சக்தித் தேவைக்கும் நாம் அனல் அல்லது அணு மின்னையே நம்பவேண்டும். இவற்றைப் பயன்படுத்தி வளர்ந்தே சூரியன் மூலம் நம் சக்தித் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளக் கூடிய காலத்திற்குச் செல்ல வேண்டும். அதுவரை அணுவினுள்ளும் இருக்கும் இறையை நம்பித்தான் ஆகவேண்டும்.

- ஆசிரியர்

# அதிக பணத்தை வசூலாக்கும் தனியார் கல்வி நிறுவனங்கள்

## பெற்றோர் கவலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்காக அறவிடப்படும் பணம் அதிகமாகக் காணப்படுவதாகவும் ஒழுங்கான நடைமுறைகள் இல்லை எனவும் மாணவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த மாவட்டத்தில் உள்ள மக்கள் இடம் பெயர்ந்து மீள்குடியேறி வாழ்வாதார ரீதியாக ஓரளவாக தம்மை முன்னகர்த்தி வாழ்ந்துவரும் நிலையில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தற்போது முன்னேற்றம் கண்டுவருவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் இந்த மாவட்டத்தில் பல தனியார் கல்வி நிறுவனங்கள் சிறப்பான முறையில் இயங்கி வருவதுடன் திருப்திகரமான கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் இந்தக் கல்வி நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக கட்டணங்களை அறவிடுவதாகவும், குறிப்பாக சில நிறுவனங்கள் 500 ரூபா, சில நிறுவனங்கள் 600 ரூபா, 750 ரூபா, 800 ரூபா என அறவிடுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தரம் 6 முதல் 11 வரையான வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காகவே இவ்வாறு கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. இவ்வாறான கட்டண அறிவித்தல்களால் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் கல்வி கற்க முடியாத நிலை காணப்படுவதாகவும் இது குறித்து கல்வி நிறுவனங்களின் நிர்வாகம் ஒழுங்கான நடைமுறைகளைப் பின்பற்றி கட்டணங்களை அறவிட்டால் ஏழை மாணவர்களும் படிப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படும் என பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். (77)

## கச்சதீவு உற்சவ சேவைகள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச சபையால் வருடா வருடம் கச்சதீவு உற்சவத்திற்கென அனைத்துச் செயற்பாடுகளையும் செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் இம்முறையும் குடிநீர்த் தாங்கிகள், கழிவுத் தொட்டிகள், பிரத்தியேகமாக செய்யப்பட்ட மலசல கூடங்கள் போன்ற செயற்பாடுகளையும் செயற்படுத்தியுள்ளனர். அங்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக உயர் அதிகாரிகளும், நெடுந்தீவு பிரதேச சபை உயர் அதிகாரிகளும், ஊழியர்களும் அத்துடன் வேலணை, ஊர்காவற்றுறைப் பிரதேசசபை ஊழியர்களும் சேவையாற்றி வருகின்றனர். இதற்கான சகல ஏற்பாடுகளையும் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தா.றெக்சியன் மேற்கொண்டுள்ளார்.

## வீதியைத் திருத்துமாறு பொது மக்கள் கோரிக்கை

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட சமயபுரம் சீட்பம் ஒழுங்கையை திருத்தித் தருமாறு பொதுமக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இவ்வீதி திருத்தப்படாமையினால் மக்களின் போக்குவரத்துக்கு பெரும் பாதிப்பு ஏற்படுவதாகவும் பேருந்து போக்குவரத்துக்கு பெரும் இடையூறாக இருப்பதாகவும் தெரிவித்த பொதுமக்கள், இரவு நேரங்களில் இந்த வதியைப் பயன்படுத்துவது தமக்கு மிகவும் ஆபததானது எனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயம் தொடர்பில் வவுனியா தெறகு தமிழ் பிரதேச சபையினர் கவனம் செலுத்தி இந்த வீதியைத் திருத்தி தருமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (125)

## பேருந்துத் தரிப்பிடங்கள் இல்லை; கடை வாசல்களில் பயணிகள்

(மல்லாவி)

மல்லாவி பிரதான சாலையில் பேருந்துத் தரப்பிடம் அமைக்கப்படாததால் பயணிகள் பெரும அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

துணுக்காய் பேருந்துத் தரிப்பிடத்திலிருந்து பேருந்து சேவைகள் வேறு இடங்களுக்கும் இடம்பெற்று வருகின்றன.

தூர இடங்களுக்குப் பிரயாண்ங்களை மேற்கொள்ளும் பயணிகள் கடைத்தெருக்களிலும் மரநிழல்களின் கீழும் பல மணிநேரம் கால்கடுக்க காத்திருக்கின்றனர். கடைக்கு முன்பாக மக்கள் பேருந்துக்காகக் காத்திருப்பதை தேநீர் கடைக்காரர் ஒருவர் பயணிகளின் நன்மை கருதி இருக்கைகள் அமைத்து வழங்கியுள்ளார்.

இதனால் கர்ப்பிணிகள், வயோதிபர்கள் எனப பலரும் இதில் அமர்ந்திருக்கக் கூடியதோடு தமது பயணத்தையும் தொடர்கின்றனர்.

இந்த வீதியில் பேருந்து தரிப்பிடம் ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(143)

## துரிதமாக இடம்பெற்று வரும் சேமலாப நிதி மீளளிப்பு

(திருநெல்வேலி)

யாழ். மாவட்டத் தொழிற் திணைக்களத்தினால் கடந்த வருடம் 951 சேமலாப நிதி மீளளிப்பு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் 938 மீளளிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் கடந்த இரண்டு மாதங்களில் 163 சேமலாப நிதி மீளளிப்பு விண்ணப்பங்கள் இலங்கை மத்திய வங்கிக்கு கொடுப்பனவுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

நிறுவனங்கள் மற்றும் தொழிலகங்களில் பணிபுரியும் ஊழியர்களின் நலன்கள் மற்றும் சேமலாப நிதி சம்பந்தப்பட்ட அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு புதன்கிழமை தவிர்ந்த மற்றைய வேலை நாட்களில் யாழ்மாவட்டத் தொழிற்திணைக களத்திலிருந்து சுமார் 20 பேரடங்கிய உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளுக்கும் சென்று நிறுவனங்கள, தொழிலகங்களில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

சேமலாப நிதி செலுத்தப்பட்டு அவற்றின் இலக்கங்கள் மற்றும் ஆவணங்களைத் தவற விட்டவர்கள் யாழ். மாவட்டத் தொழிற் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டால் அவற்றுக்கான உதவிகளை வழங்குவதற்கு திணைக்களம் தயாராகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆண் ஒருவராயின் 55 வயதும் பெண்ணொருவராயின் 50 வயதும் பூர்த்தியடைந்து சேவையை விட்டும் விலகியதன் பின்னர் K படிவத்தை நிரப்பி மேலதிக மாவட்டப் பதிவாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துடன் சேமலாப நிதி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

சேவையிலிருந்து விலகியதன் பின்னர் மூன்று மாதத்திற்குள் திருமணம் முடித்த அல்லது திருமணம் முடித்து ஐந்து வருடங்களுக்குள் சேவையை விட்டும் விலகிய ஒரு பெண் K படிவத்தை நிரப்பி மேலதிக மாவடச் செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட திருமணச் சான்றிதழுடன் விண்ணப்பத்தைச் சமர்ப்பிகக வேண்டும் என மாவட்டச் தொழிற் திணைக்களத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (137)

# மீசாலை பொது நூலகத்தில் மாணவர் வெளிப்பாட்டு நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் மீசாலை பொது நூலகத்தில் நூலக எல்லைக் குட்பட்ட முன்பள்ளிகளின் சிரேஷ்ட மாணவர்களுக்கான கதை மற்றும் பாட்டு காட்சிப்படுத்தும் நிகழ்வும் மாணவர்கள் தத்தம் திறமையை வெளிப்படுத்தும் நிகழ்வுகளும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நூலக சமூகத்தில் மட்டுமல்லாது ஏனைய உறுப்பினர்களையும் நூலகத்தின் பால் கவரும் திட்டத்தின்கீழ் இந் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இதற்கு சிங்கர் நிறுவனத்தின் சாவகச்சேரி கிளையினரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சாவகச் சேரி கிளையினரும் அனுசரணை வழங்க முன்வந்துள்ளனர் என நூலக அபிவிருத்தி ஆலோசனைக் குழுச் செயலாளரும் மீசாலை பொது நூலக நூலகருமான திருமதி தயாநிதி பாலச்சந்திரன் தெரிவித்தார். (11)

# கச்சதீவு உற்சவத்திற்கு 'வடதாரகை' படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு அந்தோனியார் கோவில் உற்சவத்தின்போது இலங்கையிலிருந்து கச்சதீவு செல்லும் யாத்திரிகர்களுக்கான சேவையை வடதாரகை பயணிகள் படகு வழங்கவிருப்பதாகத் தெரியவருகின்றது.

எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 7.00 மணிக்கும் பிற்பகல் 1.00 மணிக்கும் 4 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கும் வடதாரகை பயணிகள் படகுச்சேவை வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை நெடுந்தீவிலிருந்து 150 ரூபாவும், குறிகட்டு வானிலிருந்து 200 ரூபாவும் போக்குவரத்துக் கட்டணமாக யாத்திரிகர்களிடமிருந்து அற விடப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. நேற்றுமுன்தினம் முற்பகல் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கச்சதீவு உற்சவம் சம்பந்தமான கூட்டத்தில் இவ்விடயம் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாசையூர், குருநகர் பகுதிகளிலிருந்தும் யாத்திரிகர்கள் கச்சதீவு செலல அனுமதியளிக்கப்பட்டிருப்பதாக மேலும் தெரியவருகின்றது.. (பா)

## பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

பூநகரி கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசப் பொதுக்கூட்டம எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 9 மணிக்கு சமாசக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சமாசத் தலைவர் பா.முகுந்தன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் சமாசத்தின் 14 கிளைச் சங்கங்களின் தலைவர், செயலாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

## முல்லை வலயத்தில் இன்று கருத்தரங்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள பாடசாலை அதிபர்களுக்கான கூட்டமும் ENISE விடயம் பற்றிய கருத்தரங்கும் இன்று வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி அறிவித்துள்ளார். (04)

# ஒழுக்க சீலர்களான சமுதாயத்தை அறநெறிப் பாடசாலைகள் உருவாக்கும்

### ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(கிளிநொச்சி)

எமது பிரதேசங்களிலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் சேவைகள் பாராட்டுதலுக் குரியதோடு இன்றைய சமுதாயத்திற்கு இன்றியமையாத ஒன்றாகவும் உள்ளது என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி - முழங்காவில் வெங்கடேசப் பெருமாள் ஆலய அறநெறி பாடசாலை மாணவர்களுடன் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான அறநெறிப் பாடசாலைகள் எமது பிரதேசங்களில் மேலும் பல உருவாக வேண்டும். அதன் மூலம் நாம் எதிர்பார்க்கும் ஒழுக்கமுள்ள நல்ல எதிர்கால சமுதாயத்தை உருவாக்க முடியும். ஒவ்வொருவரும் அவரவர் மதங்களைப் பின்பற்றி அதன் நன்நெறிகளை கடைப்பிடிப்பதன் மூலம் நல்ல சமுதாயத்தை ஏற்படுத்த முடியும் என்பது யதார்த்தம். சிறு வயதிலிருந்தே நன்நெறிகளைப் புகட்டி சிறார்களை வளர்த்தெடுக்க வேண்டும். அதற்கு இவ்வாறான அறநெறிப் பாடசாலைகள் அவசியம் எனத் தெரிவித்தார்.

இந்த அறநெறிப் பாடசாலையின் தேவைகளைக் கருத்தில் எடுத்து, பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் ஒரு தியான மண்டபம் அமைத்து தருவதற்கான நடவடிக்கை நிச்சயம் மேற்கொள்ளப் படும் எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பூநகரி பிரதேச அமைப்பாளர் நிர்மல றொபின்சன், ஆலய அறங்காவல் சபையின் தலைவர், செயலாளர் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## வாக்காளர் பட்டியல்

(காரைநகர்)

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபையைத் தெரிவுசெய்வதற்கு முன்னோடியாக சங்க எல்லைப்பரப்பிலுள்ள 13 கிளைக்குழுக்களுக்கான கிளைக்குழுத் தெரிவை நடாத்த சங்கம் திட்டமிடடுள்ளது.

கிளைக்குழு அங்கத்தவர்களின் வாக்காளர் பட்டியல்கள் சங்கக் கிளைகளில் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை காட்சிப் படுத்தப்படும்.

தோப்புக்காடு J/44, விளானை J/42, கோவளம் J/41, பாலாவோடை J/44, வாரிவளவு J/40, நீலிப்பந்தனை J/47ஆகிய கிராமசேவையாளர் அலுவலகத்தில் இந்தப் பட்டியல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வாக்காளர் பட்டியலில் ஏதாவது வேறுபாடுகள், முறைப்பாடுகள் இருப்பின் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்திலோ அன்றி அலுவலக நேரத்திலோ நேரடியாக சமுகமளித்து தெரிவித்துக்கொள்ள முடியும் என பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# ஒட்டுசுட்டான் கோட்டத்தில் ஆசிரியர்களுக்கு விடுதி வசதி

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்துக்குட்பட்ட துணுக்காய் வலயத்தின் ஒட்டுசுட்டான் கோட்டப் பாடசாலைகள் பலவற்றில் ஆசிரியர்கள் தங்குவதற்குரிய விடுதி வசதிகள் இன்றி அவதிப் பட்டு வந்தனர்.

இப் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பாடசாலைகள் மீளவும் ஆரம்பித்த தன் பின் வழங்கப்பட்ட ஆசிரிய நியமனங்களாலும், இடமாற்றத்தின் பெயரிலும் யாழ். மாவட்டத்திலிருந்து பல ஆசிரியர்கள் இப் பகுதிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குரிய இருப்பிட வசதிகள் செய்யப்படாமையால் அவ் ஆசிரியர்கள் பாடசாலைத் திண்ணைகளிலும், இடிந்த கட்டடங்களிலும் தங்கியிருந்து தமது பணிகளை ஆற்றி வந்தனர்.

எனவே, இக் குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்காக ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் சேதத்திற்கு உள்ளாகி இருந்த விடுதித்தொகுதி திருததி அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும், முத்தையன் கட்டு வலதுகரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் இரண்டு அறைகள் கொண்ட ஒவ்வொரு விடுதிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்விரண்டு விடுதிகளின் வேலைகள் முடிவடைந்ததும் இரண்டாவது தவணையில் ஆசிரியர்கள் தங்கக்கூடிய வசதிகள் ஏற்படும் என இவ்விரு பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவித்தனர். (42)

## சாவகச்சேரி பொதுநூலகத்தில் போஷாக்கு விழிப்புணர்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் சாவகச்சேரி பொது நூலகத்தில் மக்களிடையேயான போஷாக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சாவகச்சேரி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் க.கர்ணன் மற்றும் பொது சுகாதார பரிசோதர்கள் போஷாக்கு பற்றிய கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், ஆர்வலர்களையும் கலந்து பயன் பெறுமாறு சாவகச்சேரி பொது நூலக அபிவிருத்திக் குழுச் செயலாளரும் நூலக பிரதம நூலகருமான சு.வித்தியானந்தன் அறிவித்துள்ளார். (11)

# சந்தையில் 'டைனமற்' மீன்கள் ; எச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்து



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கடற்பரப்பில் சில இடங்களில் 'டைனமற்' பாவித்து கடற்தொழிலாளர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக தமக்கு முறைப்பாடு கிடைத்திருப்பதாக யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு 'டைனமற்' பாவித்து மீன்பிடியில் ஈடுபடுவது அமைச்சினால் தடைசெய்யப்பட்டிருக்கிறது. இருப்பினும் சில மீனவர்கள் சட்டவிரோதமாக டைனமற்றைப் பெற்று அதனைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாகத் தமக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு டைனமற் பயன்படுத்தி பிடிக்கப்பட்ட மீனை வியாபாரி ஒருவர் மீனவரிடம் இருந்து வாங்கியமை தமது திணைக்களத்திற்குத் தெரியவந்ததாகவும், அதன் பின்னர் குறித்த வியாபாரி அவ்வாறு பிடிக்கப்படும் மீனை. வாங்கவேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். (பா)

# சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக அரச அதிபர்கள் தலைமையில் நடவடிக்கை

(வவுனியா)

சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான நடவடிக்கையைச் சிறந்த முறையில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் முன்னெடுத்துச் செல்கின்றார். அரசாங்க அதிபர்கள் தலைமையில் ஏனைய மாவட்டங்களிலும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவி திருமதி அனோமா திசநாயக்க தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக சத்தியப் பிரமாணம் செய்யும் நிகழ்வு வவனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக சிறுவர் நன்னடத்தை பிரிவு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர்களால் மட்டும் இந்நடவடிக்கையை மேற்கொள்வதென்பது கடினமான காரியம். அதற்கு சகலரதுபங்களிப்பும் அவசியம். அதுபோல் உங்களுக்குள்ள அறிவுத்திறமைகள் சந்தர்ப்பங்களை பயன்படுத்தவேண்டியதும் மிக இன்றியமையாத தேவையாகும். அதன காரணமாகத்தான் சத்தியம் செய்யும் நிகழ்வுகளை சகல மாவட்டங்களிலும் செய்து வ்ருகின்றோம். இவ்வாறான நிகழ்வுக்கு முதல் முதலில் ஜனாதிபதி கையொப்பம் இட்டு ஆரம்பித்து வைத்திருந்தார்.

தற்போது இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலும் இச்செயற்பாட்டை முன்னெடுத்து செலகின்றோம். வட மாகாணத்தில் முதல் முத லில் இச்செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு கார ணம் இந்த மாவட்ட அரசாங்க அதிபரும் சிறுவர் அபிவிருத்திக்குழு உட்பட அது சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளும் காட்டும் அக்கறைக்காகவேயாகும்.



எனவே அனைவரும் சிறுவர் பாதுகாப்புக்கான உன்னத சேவையினைச் செய்வதற்கு முன்வர வேண்டும். அந்தவகையில் யாழ்ப்பாணம் கிளிநொச்சியிலும் நடைபெற்ற பல்வேறான சந்தர்ப்பங்களில் எடுத்துக்கொண்ட தீர்மானத்தின்படி அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களின் தலைமையின் கீழ் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அனைவரும் ஓர் குடும்பமாக செயற்படவேண்டும் என்பதனையும் கூறவிரும்புகின்றேன் எனத் தெரிவித்தார். (125)

# நல்லூர் பிரதேச மக்களின் அபிவிருத்திக்கு நடவடிக்கை

## ஈ.பி.டி.பி. நல்லூர் பிரதேச அமைப்பாளர் ரவீந்திரதாசன்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச மக்களின் அபிவிருத்தி கருதி பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக் கப்படவுள்ளதாக நல்லூர் பிர தேச சபை எதிர்க் கட்சித் தலை வரும் ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச அமைப்பாளருமான ரவீந்திர தாசன் தெரிவித்துள்ளார்.

கொக்குவில் ஞானபண்டித வித்தியாயத்தில் இடம்பெற்ற இல்லமெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் உரையாற்றுகை யில்; இந்தப் பாடசாலைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பன்முகப்படுத்தப் பட்ட நிதியுதவியிலிருந்து மைதா னம் புனரமைப்பதற்கு நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பாடசாலைக்கு புதிய கட்ட வசதிகளை ஏற் படுத் துவதற்கு நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளன.

இதேவேளை நல்லூர் பிர தேச மக்களின் அபிவிருத்தி கருதி, வீட்டுத்திட்ட வசதிகள் மல சலகூட வசதிகள், நடுத்தர குளங்கள் புனரமைப்பு , வீதி அபிவிருத்தி, மின்சார வசதி, விவசாயிகளுக்கான அபிவிருத்தி



நடவடிக்கைகள் போன்றன மேற் கொள்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக் கைகள் எடுத்துள்ளார் என்றார்.

## ஊடகவியலாளர் அமைப்பு கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கான அமைப்பொன்று கடந்த 24ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் நீண்ட காலமாக ஊடகவியலாளர்களுக் கான அமைப்பொன்று இல்லாத நிலையில் இங்குள்ள ஊடகவிய லாளர்கள் பதிவுகள் எதுவுமின்றி ஊடகம் சார்செயற்பாடுகளை மேற்கொண்டுவந்தனர்.

இந்த நிலையில் இங்குள்ள ஊடகவியலாளர்கள் ஒன்றி ணைந்து இவ் அமைப்பை ஆரம் பித்துள்ளனர்.புதிய நிர் வாகத் தலைவராக டாக்டர் திரு லோக மூர்த்தியும்,செயலாள ராக கஜேந திரனும், பொருளாளெராக ரவீந்திரனும், இணைப்பாளராக பாஸ் கரனும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். மேலும் 11 பேர் அங்கத்தவர்களாக தெரிவு செய் யப்பட்டுள்ளனர் (77)

## இந்து நாகரிக ஆசிரியர்களுக்கு வவுனியாவில் வதிவிடச் செயலமர்வு

முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்ட பாடசாலைகளில் இந்துநாகரி கம் கற்பிக்கும் ஆசிரியர்களுக் கான வதிவிடச் செயலமர்வு வடக்கு மாகாண கல்வித் திணைக களத்தால் வவுனியா சுத்தானந்த சபா மண்டபத்தில் எதிர்வரும்- 14ஆம்,15ஆம்,16ஆம திகதிகளில் நடத்தப்படவுள்ளன.

இச் செயலமர்வில் பங்கு பற்ற விரும்பும் ஆசிரியர்களின் விபரங்களை மாவட்டத்திற்கு உட பட்ட கல்விப் பணிப்பாளர் களிடம் வடமாகாண கல்வித் திணைக்களம் கோரியுள்ளது. இச் செயலமர்வுகளில் பங்குபற் றும் ஆசிரியர்களுக்கு உணவு, தங்குமிடவசதிகள் தேவைப் படின் அதற்கான ஏற்பாடு களையும் கல்வித்திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (42)

## 2 சிறுவர் இல்லங்களுக்கு மூடுவிழா

(திருநெல்வேலி)

இருபாலையில் இயங்கி வந்த இரண்டு சிறுவர் இல் லங்கள் மூடப்பட்டுள்ளன. இரு பாலை-கோண்டாவில் வீதியி லும், பருத்தித்துறை வீதியிலும் அமைந்திருந்த இரண்டு இல் லங்களே இவ்வாறு மூடப்பட்ட வையாகும்.

இவற்றிலிருந்த சிறுவர்கள் பலர் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பெற் றோர்கள் இல்லாதவர்கள் வேறு காப்பங்களுக்கு மாற்றப் பட்டுள்ளனர்.

வடமாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் பரிந்துரையின் பேரிலேயே இவ்வில்லங்கள் கலைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது. சிறுவர் நலன்களைப் பேணுவதற்கான எந்த வித அடிப படை வசதிகளையும் இவ்வில் லங்கள் கொண்டிருக்கவில்லை எனத் தெரியவருகிறது.

யாழ். மாவட்டத்தில் மூடப் பட்ட ஐந்தாவது சிறுவர் இல்லம் இதுவாகும். (137)

## வசந்த நிலா சிறு குழுவினரால் அரைக்கும் ஆலை அமைப்பு

(மல்லாவி)

பாலைப்பாணி கிராமத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச் சின் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழான வாழ்வாதாரச் செயற் பாடாக வசந்த நிலா சிறு குழு வினர் அரைக்கும் ஆலை ஒன்றை அமைத்துள்ளனர்.

இவர்கள் தாம் உற்பத்தி செய் யும் பொருட்களை அனுராதபு ரத்தில் தேசத்தின் மகுடம் கண் காட்சிக்கு அனுப்பி வைக்கப் பட்டு அமைச்சர்களின் பாராட் டுக்களைப் பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரி வுக்குட்பட்ட பாலப் பாணி கிரா மத்தில் பொருளா தார அபிவி ருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் வாழ்வாதார செயற் பாடாக இக் குழுவினர் அரைக் கும் ஆலையொன்றை அமைத்து அரிசிமா உற்பத்திகளை மேற் கொண்டு வருகின்றனர்.

மேற்படி பாலப்பாணி கிரா மமானது மாங்குளம் பகுதியிலி ருந்து தெற்கே 12 கிலோ மீற்றர் தூரத்திலும் மல்லாவி நகரில் இருந்து 15 கிலோ மீற்றர் தூரத் தில் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமமாகும்.

இக்கிராமத்தில் 130 அங் கத்தவர்களைக் கொண்ட 38 குடும்பங்கள் வாழ்ந்து வருகின் றனர். இவர்கள் கமத் தொழிலை யும் கடற்தொழி லையும் மேற் கொண்டு வருகின்றனர்.

இந்த மக்களின் நிலையை கருத்தில் கொண்டு மீள்எழுச் சித்திட்டத்தின் கீழ் அரிசி ஆலை ஒன்று அமைக்கப்பட்டுள்ள நிலையில், இக் குழுவினர் அதனை சிறந்த முறையில் பயன்படுத்தி அரிசிமாவினை அரைத்து பொதிசெய்து வெளிமாவட் டங் களில் சந்தைப்படுத்தி வருகின் றனர்.

அத்துடன் அங்கு விளையும் கச்சான் விதைகளைக் கொண்டு கச்சான் அல்வா, பிஸ்கட், எள்ளு ருண்டை வகைகளையும் பொதி செய்து சந்தைப்படுத்தி வரு கின்றனர். (143)

## சட்டவிரோதமான மீன்பிடி எரிபொருள் மானியம் இல்லை

(யாழ்ப்பாணம்)

தடைசெய்யப்பட்டுள்ள கடற்தொழில் உபகரணங்கள் மற்றும் முறைகளைப் பயன்படுத்தி கடற்தொழிலில் ஈடுபடும் கடற்தொழி லாளர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படமாட்டாது என யாழ். கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்த சுற்று நிருபமொன்று கடந்த திங்கட் கிழமை சகல மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத்திணைக்களங்களுக்கும் கடற்தொழில் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

றோலர் மீன்பிடி, தங்கூசிவலை முலமா மின்பிடி கடற் தொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் பதிவிற்குட்பட்டதாக கடற்கலங் களைப்பயன்படுத்தி கடற்தொழிலில் ஈடுபடுபவர்கள் ஆகியோரிற்கு இவ் எரிபொருள் மானியம் வழங்கப்படமாட்டாது எனவும் தெரியவருகின்றது.

யாழ். மாவட்ட கடற்தொழிலாளர்களுக்கான எரிபொருள் மானிய முத்திரைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் விநியோகிக் கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்தொழில் ரீதியல் வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (பா)

## வெளிஇணைப்பு மீன்பிடி வள்ளங்களை பதிவு செய்வதற்கு நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பதிவு செய்யப்படாத வெளியிணைப்பு மீன்பிடி வள்ளங்களைப் பதிவு செய்ய விசேட நடமாடும் சேவை இடம் பெறவுள்ளது. இது தொடர்பாக கடற்தொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு வெளி யிட்டுள்ள அறிக்கையில், யாழ்ப்பாண மாவட் டத்தில் கடற்தொழில் கைத்தொழில் நடவடிக் கையில் ஈடுபடும் வெளியிணைப்பு இயந்திரங்கள் பல கடறதொழில், நீரியல் வளங்கள் திணைகளத் தில் இன்னும் பதிவு செய்யப்படாமல் இருப்பதன் காரணமாக எரிபொருள் விலையேற்றத்தின் பின் னர் மீவர்களுக்கு வழங்கப்படுகின்ற டீசல் மற்றும் மண்ணெண்ணெய் மானியத்தைப் பெற்றுக் கொள் வதில் வடபகுதி மீனவர்களுக்கு பிரசசி னை ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்ட கடற்தொழில் கிராமிய மீனவர் சம்மேள னத்தின் தலைவர் என்.பொன்னம்பலம் கடற்தொ ழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்னவை நேரில் சந்தித்து இப்பிரச்சினையைத் தீர்க்குமாறு எடுத்துக் கூறினார்.

அவர் அமைச்சரிடம் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,கடந்த யுத்த காலப்பகுதியில் யாழ்.மாவட்ட மீனவர்கள் வெளியிணைப்பு இயந் திரங்களைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக் கையில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட் டிருந்தது. இயந்திரமற்ற படகுகளை மாத்திரம் பயன்படுத்தி மீன்பிடிப்பிரதேசங்களில் பொறுப் பாக இருந்த இராணுவ மற்றும் கடற்படையி னரிடம் படகுகளை பதிவு செய்து ஒரு குறிப்பிட்ட தூரத்தில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட அனு மதிக்கப்பட்டனர். இதன் காரணமாக இவர்கள் கடற்தொழில் நீரியல் திணைக்களத்தில் தமது இயந்திரம் மற்றும் படகுகளைப் பதிவு செய்யவில்லை.

யுத்தம் முடிவுற்று வடபகுதியில் சுமுக நிலை ஏற்பட்டு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக் கப்பட்டு தற்பொழுது மீன்பிடி நடவடிக்கையில் ஈடு பட்டு வருகின்ற சந்தர்ப்பத்திலேயே மீனவர்களுக் கான எரிபொருள் மானியம் வழங்க நடவடிக்கை எடுககப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வட பகுதியில் இம் மீனவர்கள் தமது வெளியிணைப்பு இயந்திரங்களை திணைக்களத்தில் பதிவு செய்யா மையின் காரணமாக எரிபொருள் மானியத்தை பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

எனவே பதிவு செய்யப்படாத அனைத்து வெளி யிணைப்பு பட குகளையும் பதிவு செய்து அவர் களும் எரிபொருள் மானியத் தை பெற்றுக்கொள்ள உதவி செய்யுமாறு கேட்டக் கொண்டார்.

இவ்விடயம் தொடர்பாக கவ னத்திற்கொண்ட கடற்தொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன யாழ்ப் பாண மாவட்டத்தில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு பதிவு செய்யப்படாமல் இருக்கின்ற அனைத்து வெளியிணைப்புப் படகுகளையும் விசேட நடமாடும் சேவையினை யாழ்ப்பாணத்தில் நடாத்தி பதிவு செய்வதற்கான நடவடிக் கைகளை மேற்கொண்டு மீனவர்களுக்குத் தேவையான எரி பொருள் மானியத்தை அவர்கள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை வழங்கினார் இதேபோன்று முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்கள் உட் பட கிழக்கு மாகாணத்திலும் இந நடவடிக்கையை விஷ்தரிக்குமாறும் பணிப்புரை வழங்கினார்.(பா)

## முரசின் இன்றைய பலன்

(02.03.2012 –வெள்ளிக்கிழமை)

கர வருஷம் மாசி மாதம் 19 ஆம் திகதி. நவமி பிற்பகல் 6.49 வரை. நட்சத்திரம் மிருகசீரிடம் முன் இரவு 7.26 வரை. சித்தயோகம், இராகுகாலம் 10.57 - 12.27 வரை. சுபநேரம் 6.27 - 7.57 வரை. எமகண்டம் 3.27 - 4.57 வரை. குளிகைகாலம் 7.57 - 9.27 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தியாகம்,முன் எச்சரிக்கை,பெற்றோரால் உதவி, பொன்பொருள் சேர்க்கை. |
| ரிஷபம் | தெளிவு,வெற்றிமேல்வெற்றி, திடீர் பண வரவு, உடல் ஆரோக்கியம். |
| மிதுனம் | செலவுகள், தலையீடுகளைத்தவிர்க்கவும், அவசரம் கூடாது,இடமாற்றம், |
| கடகம் | பணவரவு,விருந்துபசாரம்,சகோதரரால் சிரமம், உறவினர்கள் அனுசரணை. |
| சிம்மம் | சோம்பல், முற்கோபம் கூடாது, அரச உதவி கள், ஸ்தல யாத்திரை. |
| கன்னி | மனதில்தெளிவு, முன்னெச்சரிக்கை, மறைமுக எதிர்ப்பு, திருமணத்தில்தாமதம். |
| துலாம் | திடீர் இலாபம் பெறல், உடல் உபாதை, பயண அலைச்சல், நிதானம் நன்று. |
| விருச்சிகம் | சந்திராட்டமம் கவனம், சுபகாரியத்தடை, பொருள்வரவில் தேக்கம், நட்டம். |
| தனுசு | இருப்பிடஆதரவு, பதவிஉயர்வு, திருமண யோகம், தேக ஆரோக்கியம். |
| மகரம் | முயற்சிவெற்றி, தூரப் பயணங்கள், ஆபரணச்சேர்கை, புத்திரப்பேறு. |
| கும்பம் | புத்திமேன்மை, குடும்பநலம், கடன்பளு குறையும், வேலைவாய்ப்பு. |
| மீனம் | காரியலாபம்,உழைப்புவிரயம், சண்டை சச்சரவு, அரசகெடுபிடி. |



இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கம் 49 ஆவது தடவையாக நடத்திய சிரேஷ்ட பிரிவினருக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியில் மிகவும் பலம் வாய்ந்த கண்டி அணியைத் தோற்றகடித்து யாழ். அணி கிண்ணத்தை வெற்றி கொண்டது. யாழ். மாவட்ட அணித் தலைவர் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயிடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வதையும், கூடைப்பந்தாட்ட வீரர்களையும் காணலாம். (93)

## புனித அந்தோனியார் கல்லூரி துடுப்பாட்டத்தில் வெற்றி

(அளவெட்டி)

ஊர்காவற்றுறை கோட்ட மட்ட 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி அண்மையில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் புனித அந்தோனியார் கல்லூரி முதலாமிடத்தையும், கரம்பொன் சண்முகநாதன் வித்தியாலயம் இரண்டாமிடத்தையும், அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. (93)

# விளையாட்டை நவீன மயப்படுத்தும் கருத்திட்டத்துக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டை நவீனமயப் படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் வெளிநாட்டுப் பயிற்சியாளர்களின் சேவையைப் பெற்றுக் கொண்டு உள்நாட்டு விளையாட்டுத்துறையின் மனித வளத்தை அபிவிருத்தி செய்வதற்கான செயல் முறையொன்றை செயற்படுத்துவதற்கு விளையாட்டுத் துறை அமைச்சினால் திட்டமிடப்பட்டுள்ளது.

மெய்வன்மை ஜூடோ விளையாட்டுக்கு ஆண், பெண் பங்குபற்றுநர்களிடமிருந்தும் கரப்பந்தாட்டம் மற்றும் குத்துச்சண்டை போட்டிகளுக்கு ஆண் பங்குபறறுநர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 21 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதுடன், உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அவசியமாகும். விளையாட்டுக்களில் பெற்ற சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் “விளையாட்டை நவீனமயப்படுத்தும் கருத்திட்டம்” என எழுதி எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பாக பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனம், 100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு - 7 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

# சிநேகபூர்வ கால்பந்தாட்டம்; இங்கிலாந்து, சுவிஸ் அணிகள் வெற்றி

லயனல் மெஸ்ஸியின் ஹட்ரிக் கோல்களின் உதவியோடு சுவிற்சர்லாந்தை 3-1 என்ற கணக்கில் நேற்று முன்தினம் ஆர்ஜென்ரீனா அணியை வெற்றி கொண்டது.

சிநேகபூர்வ போட்டியாக இடம் பெற்ற இந்தப் போட்டியில் பார்சிலோனாவின் மெஸ்ஸி, முதற்பாதியில் ஒரு கோலையும், பிற்பாதியில் இரண்டு கோல்களையும் அடித்து ஆர்ஜென்ரீனாவை வெற்றிபெறச் செய்தார்.

சுவிற்சர்லாந்தின் “ஸ்ரேட் டி சுஸி” மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியை 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் பார்த்து இரசித்தனர்.

இதேவேளை, இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இன்னுமொரு போட்டியில் நெதர்லாந்தின் இறுதிநேரக் கோல் காரணமாக நெதர்லாந்து அணி 3-2 என்ற கணக்கில் இங்கிலாந்தை வீழ்த்தியது.

இங்கிலாந்தின் பயிற்றுவிப்பாளர் பபியோ கெப்பல்லோவின் இராஜினாமாவின் பின்னர் இடம்பெற்ற முதலாவது போட்டி என்பதோடு, இன்று போட்டியின் தலைவராக ஸ்கொட் பார்க்கர் நியமிக்கப்பட்டிருந் தமையும் குறிப்பிடத்தக்கது.

76,283 பார்வையாளர்கள் பார்த்து இரசித்த இப்போட்டியில் ஆரம்பத்தில் 2 கோல்களைப் போட்டு முனநிலையில் இருந்த நெதர்லாந்து அணியை, இறுதி நேரத்தில் இரண்டு கோல்கள் மூலம் இங்கிலாந்து சமன் செய்தது. எனினும் இறுதிக்கட்டத்தில் நெதர்லாந்து இன்னுமொரு கோலைப் போட்டு 3-2 என்ற கணக்கில் வெற்றிகொண்டது

விளையாட்டுச் செய்திகள்

# உத்தரவை ஏற்க மறுத்ததால் அணியிலிருந்து நீக்கப்பட்ட ஷேவாக்



(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் சபையின் உத்தரவை ஷேவாக் ஏற்க மறுத்ததே ஆசிய கிண்ணத்திற்கான இந்திய அணியிலிருந்து அவர் நீக்கப்பட்ட காரணமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது நடைபெற்று வரும் 3 நாடுகள் போட்டியில் ஷேவாக், டெண்டுல்கர், கம்பீர் ஆகிய 3 பேரை சுழற்சி முறையில் கப்டன் டோனி தேர்வு செய்தார். மந்தமான களத்தடுப்புக் காரணமாகவே சுழற்சி முறை பின்பற்றப்பட்டதாக அவர் விளக்கம் அளித்தார். டோனியின் இந்த கருத்துக்கு ஷேவாக் பதிலடி கொடுத்தார்.

இதன்மூலம் இந்திய அணியில் பிளவு இருப்பது வெளியே தெரிந்தது. டோனி-ஷேவாக் இடையே ஏற்பட்ட மோதலால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அதிர்ச்சி அடைந்தது.

இந்த மோதல் விவகாரத்திற்கு பிறகு இருவரும் இணைநது ஊடகங்களுக்கு அறிக்கை கொடுக்க வேண்டும் என்று கிரிக்கெட சபை வலியுறுத்தியது.

ஆனால் கிரிக்கெட் சபையின் இந்த உத்தரவை ஏற்க ஷேவாக் மறுத்துவிட்டார். டோனியுடன் இணைந்து அறிக்கை கொடுக்க இயலாது என்று அவர் கூறியதாக தகவல் தெரிவிக்கின்றன.

இந்தக் கூட்டு அறிக்கையை கிரிக்கெட் சபையே தயாரித்து இருந்தது. இந்த அறிக்கையை டோனி படிப்பார். ஷேவாக் அருகில் இருக்க வேண்டும். அறிக்கை படித்த பிறகு இருவரும் நிருபர்களிடம் எந்த கருத்தும் தெரிவிகக்கூடாது என்றும் கிரிக்கெட் சபை வலியுறுத்தி இருந்தது.

ஆனால் ஷேவாக் கிரிக்கெட் சபையின் இந்த உத்தரவை கேட்க மறுத்துவிட்டார். டோனி இதற்கெல்லாம் சரி என்று ஒப்புக் கொண்டார். இதனால் ஷேவாக் மீது கிரிக்கெட்சபை அதிருப்தி அடைந்தது.

இதன் காரணமாகவே ஆசிய கோப்பை போட்டியில் இருந்து ஷேவாக் நீக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது. 3 நாடுகள் போட்டியில் மோசமாக ஆடியது ஒரு பிரச்சினை இல்லை. அதன் காரணமாக அவர் நீக்கப்படவில்லை. கிரிக்கெட் சபையின் உத்தரவை மதிக்காததால் நீக்கப்பட்டார் என்று தகவலறிந்த கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவித்தன

# இந்திய அணியில் அதிக மாற்றம் எதிர்பார்த்தாராம் கவாஸ்கர்



ஆசியக்கிண்ணப் போட்டிகளுக்கான இந்திய அணியில் அதிக மாற்றங்களைத் தான் எதிர்பார்த்ததாக இந்திய அணியின் முன்னாள் தலைவரும் நேர்முக வர்ணனையாளருமான சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

போட்டிகளில் தங்களை திறமையாக வெளிப்படுத்தாத வீரர்கள் ஆசியக்கிண்ணப் போட்டிகளுக்கான அணியிலிருந்து நீக்கப்படுவார்கள் என எதிர்பார்த்ததாகவும், அது இடம் பெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார். எனினும் தெரிவு செய்யப்பட்டுள்ள அணியை விமர்சிக்க விரும்பவில்லை எனத் தெரிவித்த கவாஸ்கர், அவ்வாறு விமர்சிப்பின் அது அணியின் மனத்திடத்தைப் பாதிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

4-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரைத் தோலவியுற்று, பின்னர் ஒரு குறிப்பிட்டளவிலான (ஒருநாள்) போட்டிகளைத் தோல்வியுற்ற பின்னர் அணியில் மாற்றங்களை ஏற்படுத்தாவிடில், இவ்வாறான தோல்விகளைச் சந்திக்க எதிர் காலத்தில் நாங்கள் தயாராக இருக்க வேண்டும்.

ஆசியக்கிண்ணப் போட்டிகளுக்கான அணியின் உப தலைவராக விராத் கோலி நியமிக்கப்பட்டிருப்பது அவரது திறமை வெளிப்பாடுகளுக்கு கிடைத்த பரிசு என்ற போதிலும், இதுவரை காலமும் உப அணித் தலைவராகச் சிறப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த கௌதம் கம்பீர் இந்த விடயத்தில் நோகடிக்கப்படுவதாக இருக்கும்.

விராத் கோலிக்கு உப அணித்தலைவர் பதவி வழங்கப்பட இன்னும் சிறிது காலம் பொறுத்திருக்கலாம்.

விராத் கோலி தலைமைத்துவத்துக்குப் பொருத்தமானவராகக் காணப் படும் நேரத்தில் அவருக்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# இன்றைய போட்டியில் கிளார்க் சந்தேகம் ?



(மெல்போர்ன்)

இலங்கை அணிக்கு எதிரான இன்றைய கடைசி லீக் போட்டியில், அவுஸ்ரேலிய அணித் தலைவர் கிளார்க் பங்கேற்பது சந்தேகமாக உள்ளது.


முதுகு மற்றும் தொடையின் பின்பகுதியில் ஏற்பட்டிருந்த காயம் காரணமாக இந்தியாவுக்கு எதிரான போட்டியில் இவர் பங்கேற்கவில்லை. எனினும் இன்று நடக்கும் இலங்கைக்கு எதிரான கடைசி லீக் போட்டிக்கான, அவுஸ்ரேலிய அணியில் சேர்க்கப் பட்டிருந்தார்.

இதனிடையே, இந்த போட்டியில் கிளார்க் பங்கேற்பது சந்தேகமாக உள்ளது. இதுகுறித்து அவுஸ்ரேலிய அணி தேர்வுக் குழுத் தலைவர் ஜோன் இன் வெராரிட்டி கூறுகையில்,

கிளார்க் உடற் தகுதி குறித்து இதுவரையிலும் உறுதி செய்யப் படாமல் உள்ளது. இவர் இன்றைய போட்டிக்கு தகுதி பெற்றுவிடுவார் என்று நினைக்கிறோம். ஒருவேளை முழு உடற்தகுதி பெறவில்லை என்றால், கிளார்க் ரிஸ்க எடுக்க மாட்டார் என்று நம்புகிறேன் என்றார்.


# இந்துக்களின் போர் இன்று ஆரம்பம்

யாழ்.இந்துக் கல்லூரி அணி



அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுநர் ஆகியோருடன் யாழ்.இந்துக் கல்லூரி அணி வீரர்கள் நிற்பதைக் காணலாம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி



அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுநர் ஆகியோருடன் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வீரர்கள் நிற்பதைக் காணலாம்.

(யாழ்ப்பாணம்.)

இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படும் இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி இன்றைய தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையில் ஐந்தாவது முறையாக இந்தப்போட்டி இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியின் தலைவராக கி.கிருசோபனும், உபதலைவராக வ.ஜஸ்மினனும் பணியாற்றவுள்ளனர். கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு அணித் தலைவராக பங்குஜனும், உப தலைவராக ராகுலனும் கடமையாற்றுகின்றனர்.

இந்த வருடம் இடம்பெற்ற பல பாடசாலை மட்டப் போட்டிகளில் இரு அணி வீரர்களும் சதங்களைப் பதிவாக்கியுள்ளதுடன் சிறப்பான பல வெற்றிகளையும் பெற்றுள்ளனர்.

சகலதுறையில் இரு அணிகளுமே வலுவான நிலையை இம்முறை கொண்டுள்ளது. கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டியில் முதல் வெற்றியைப் பதிவாக்கிய அணி என்ற உத்வேகம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு சாதகமாக இருக்கும் அதேவேளை, இந்த ஆண்டும் வெற்றியைப் பதிவாக்கிக் கொள்ள புதிய பொறிமுறையுடன் களமிறங்க முயற்சிக்கும்.

அதேபோன்று கடந்த ஆண்டு இடம்பெற்ற போட்டியில் தோல்வியடைந்த யாழ். இந்துக் கல்லூரி அணி அதனை நிவர்த்தி செய்யும் வகையில் தமது களவியூகங்களை அமைக்கும் அதேவேளை, எதிரணிக்கு கடும் நெருக்கடி கொடுத்து போட்டியை தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முயற்சிக்கும்.

எனவே, இந்தப் போட்டி இரு அணிகளுக்கும் சவால் நிறைந்த போட்டியாக அமையும் அதேவேளை, இரு அணி ஆதரவாளர்கள், கிரிக்கெட் ரசிகர்களும் நல்லதொரு விருந்தாக அமையும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. (93)

## ஒருங்கிணைந்த ஆட்டத்தால் வெற்றியைப் பெறுவோம்



(யாழ்ப்பாணம்)


கடந்த முறையுடன் ஒப்பிடும்போது இந்த முறை எமது அணி சிறப்பான பல சகலதுறை வீரர்களைக் கொண்டுள்ளது. அத்துடன் இந்த வருடம் இது வரை நடைபெற்ற போட்டிகள் பலவற்றில் வெற்றிகளையும் பதிவாக்கியுள்ளோம். இந்த வகையில் இந்தப் போட்டியில் சிறப்பான ஒருங்கிணைந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றிக்காகப் போராடுவோம் என்று யாழ். இந்துக் கல்லூரி அணித் தலைவர் கி. கிருஷோபன் தெரிவித்துள்ளார்.

இந்துக்களின் போர் குறித்து எமது செய்தியாளர் கருத்துக் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வருடம் நடைபெற்ற போட்டிகளில் எமது நான்கு வீரர்கள் சதம் அடித்துள்ளனர். இதில் ஜஸ்மினன், சஜீவன், கல்கோபன், றுக்ஸ்மன் ஆகிய ஐந்து பேரும் சதம் அடித்துள்ளனர். சிறபபான முறையில் பந்து வீசி வரும் மதுசன் பல விக்கெட்டுக்களை இந்த வருடம் சாய்த்துள்ளார்.

எனவே, சிறந்த சகலதுறை வீரர்களைக்கொண்ட நாம் இந்த வருடம் இடம் பெறும் ஐந்தாவது இந்துக்களின் போரில் சிறப்பான ஒருங்கிணைந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றிக்காக இறுதி வரை போராடுவோம் எனவும் தெரிவித்தார். (93)

## வியூகங்களை மாற்றி எதிரணிக்கு நெருக்கடி



(யாழ்ப்பாணம்)

ஆட்டத்தின் நிலைமைகளை நோக்கி போட்டியின் வியூகங்களை மாற்றியமைக்கக்கூடிய சகலதுறை வீரர்களை நாம் கொண்டுள்ளதால் எதிரணிக்கு கடும் நெருக்கடியை போட்டிக்களத்தில் ஏற்படுத்துவோம் என்று கொக்குவில் இந்துக் கல்லூரி அணித் தலைவர் பி.பங்கஜன் தெரிவித்தார்.

இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி குறித்து எமது செய்தியாளர் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கல்லூரி அணியில் சிறந்த அனுபவம், திறமை மிக்க வீரர்கள் உள்ளனர். அவர்கள் போட்டியின் நிலையை மாற்றியமைக்கக் கூடிய ஆற்றல் மிக்க வியூகங்களை வகுப்பதில் வல்லவர்கள். அத்துடன இந்த வருடம் இதுவரை நடைபெற்ற போட்டிகளில் அனைத்துப் பிரிவிலும் நாம் வெற்றியைப் பதிவாக்கியுள்ளோம்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு எதிரான போட்டியில் நான் உட்பட ராகுலன், ஆதித்தன் சதம் பெற்றுள்ளோம். இந்தப் போட்டியில் 500 இறகும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்துள்ளமை இது எங்களுக்கு நல்ல உற்சாகமான விடயம். எனவே, எதிரணிக்கு கடும்நெருக்கடி கொடுத்து வெற்றிக்காகப் போராடுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (93)

## சண்டிலிப்பாய் கோட்ட கரப்பந்தாட்ட முடிவுகள்

(அளவெட்டி)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப்பாடசாலைகளிடையே மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றபாடசாலைகள் வருமாறு:

**15 வயதுப் பிரிவு பெண்கள்**

முதலாமிடம்- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் - மாதகல் சென்.ஜோன் வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு பெண்கள்**

முதலாமிடம் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, மூன்றாமிடம்- மாதகல் சென். ஜோசப் வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு பெண்கள்**

முதலாமிடம் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் - மாதகல் சென்.ஜோசப் வித்தியாயலம். (93)

## வடமராட்சி வலய வலைப்பந்தாட்டம்

(அளவெட்டி)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்றும், நாளைமறுதினம் ஞாயிறுக் கிழமையும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தப் போட்டிகளில் 15, 17,19 வயதுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் பங்கு பற்றவுள்ளனர். இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்கள் உரிய நேரத்துக்கு சமுகமளிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (93)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(புங்குடுதீவு)

யாழ். புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை சனிக்கிழமை பாடசாலை மைதானத்தில் முற்பகல் 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

எஸ்.கே. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராகவும், ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், வேலணை கோட்டக் கல்வி அதிகாரி கு.சரவண பவானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## மென்பந்தாட்டம்

(அளவெட்டி)

வலிகாமம் கல்விவலய பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்தாட்டப் போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான இந்தப் போட்டிகள் காலை 8.30 மணிமுதல் நடைபெறவுள்ளன. (93)

# இன நல்லிணக்கத்தைப் பாதிக்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமனங்கள்


## அமைச்சர் வாசுதேவ குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டமை இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைப் பாதிப்படையச் செய்யுமென தேசிய மொழிகள் மற்றும் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்திற்கான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் 22 பேர் அண்மையில் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாக பதவியுயர்த்தப்பட்டனர். இவர்களில் சிங்களவர்கள் 21 பேரும், ஒருவர் முஸ்லிமும் ஆவர். ஒரு தமிழரேனும் பதவியுயர்த்தப்படவில்லை.

இது குறித்தே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார்.



இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், இந்த நியமனங்கள் முற்று முழுக்க பிழையான செயற்பாடாகும்.

இப்பதவிக்கு தகுதியுள்ள தமிழ் பொலிஸார் விண்ணப்பித்துள்ளனர். அப்படியிருந்தும் அவர்கள் இணைத்துக் கொள்ளாமை அநீதியான செயலாகும்.

அத்தோடு இவ்வாறான செயற்பாடுகளால் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சி பாதிக்கப்படும்.

மேலும் மேலும் இனங்களுக்கிடையேயான இடைவெளிகள் அதிகரித்தே செல்லும். எனவே இது தொடர்பில் உடனடியாக அரசாங்கத்திற்கு கடிதம் எழுதவுள்ளேன் என்றார.

# போலி ஆவணங்கள் தயாரிப்பு; வவுனியாவில் இருவர் சிக்கினர்

(வவுனியா)

இராணுவ உத்தியோகபூர்வ முத்திரைகளை போலியாகத் தயாரித்து, இராணுவ முகாம்களுக்கு விசாரணைக்கு வர வேண்டும் என தற்போது வெளிநாட்டில் வசிக்கும் வவுனியாவைச் சேர்ந்தவர்களுக்கு கடிதம் அனுப்பிய குற்றச்சாட்டில் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இக்கடிதங்கள் வெளிநாடுகளிலுள்ள நபர்களால் அரசியல் தஞ்சம் கோருவதற்கு பயன்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இராணுவ முகாம்களுக்குள் மக்கள் துன்புறுத்தப்படுவதாகவும் மீண்டும் இலங்கைக்கு வர வேண்டாம் எனவும் கூறும் கடிதங்களையும் மேற்படி சந்தேக நபர்கள் அனுப்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஜோஸப் முகாம் கண்டி வீதி, வவுனியா எனும் முகவரியில் வசித்தவர்களுக்கே இக்கடிதங்கள் அனுப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் இருவரும் வவுனியா தெற்கு மருத்துவ அதிகாரியின் அலுவலகத்தில் பணியாற்றியவர்களாவர். இவர்கள் இன்று வவுனியா நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப் பட்டனர்.

வடக்குக் கிழக்கிலுள்ள மக்கள் அரச படைகளினால் துன்புறுத்தப்படுவதாக கூறி நாட்டின் மதிப்புக்கு சர்வதேச ரீதியில் பங்கம் ஏற்படுத்தும் நபர்களுடிக்கு எதிராகக் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனப் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

# எதிரணிகளின் ஆர்ப்பாட்டம்; கூட்டமைப்பும் பங்கேற்கும்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக பொது எதிரணியின் போராட்டத்தில் பங்குபற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ பிரேமச்சந்திரன் இது தொடர்பாக தெரிவிக்கையில், பொது எதிரணிகளின் போராட்டத்தில் பங்குபற்ற தமது கட்சி தீர்மானித்திருப்பதாக உறுதிப்படுத்தினார். இன்று நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் தமது கட்சி பங்குபற்றும் எனவும் அவர் கூறினார்.



இதேவேளை அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்திற்காக பொது அணியொன்றை அமைப்பதற்காக ஜே.வி.பியுடன் ஐ.தே.க. உத்தியோகபூர்வமற்ற மட்டத்திலான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்த யோசனைக்கு சாதகமாக பதிலளித்துள்ளதாகவும் பாணந்துறையில் இன்று நடைபெறவுள்ள கூட்டு எதிரணி ஆர்ப்பாட்டத்தில் அக்கட்சி பங்குபற்றும் என எதிர்பார்ப்பதாகவும் மங்கள சமரவீர கூறினார்.

இப்பொது முன்னணியானது ஒரு தேர்தல் கூட்டணி அல்ல எனவும் இது ஊழல், மனித உரிமை மீறல்கள், வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்திற்கான அமைப்பு எனவும் மங்கள சமரவீர கூறினார்.

# மன்னார் வாரச்சந்தையில் தீ; 35 கடைகள் எரிந்து சாம்பல்

(மன்னார்)

மன்னார் வாரச்சந்தைப் பகுதியில் நேற்று அதிகாலை ஏற்பட்ட திடீர் தீவிபத்தில் அங்குள்ள வர்த்தக நிலையங்கள் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.



வாரச் சந்தையில் காணப்பட்ட ஆடை விற்பனை நிலையங்களே அதிகமாக எரிந்து சாம்பலாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். எனினும் இத் தீவிபத்திற்கான காரணம் கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தீ விபத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் இதனால் ஏற்பட்டுள்ள சேதவிபரங்கள் இதுவரை கணிப்பிடப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இத் தீவிபத்தினால் அப்பகுதியிலுள்ள எவருக்கும் காயங்களோ, உயிராபத்தோ ஏற்படவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# எதிர்க்கட்சிக் கூட்டமைப்பை உருவாக்க ஐ.தே.க.முயற்சி

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் விரிவான கூட்டமைப்பு ஒன்றை உருவாக்க ஐக்கியதேசியக் கட்சி முயற்சி செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி உள்ளிட்ட பல கட்சிகளை இந்தக் கூட்டமைப்பில் இணைத்துக் கொள்ள முயற்சி எடுக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கும் பொதுவான ஓர் எதிர்க்கட்சியின் அவசியம் வெகுவாக எழுந்துள்ளது என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பலகட்சிகளுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கூட்டணி ஒன்றை அமைப்பது எமது நோக்கமல்ல எனவும், அரசாங்கத்திற்கு எதிராக வலுவாக குர்ல் கொடுப்பதே பிரதான இலக்கு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் எதிர்நோக்கி வரும் அன்றாட பிரச்சினைகளை திசை திருப்பும்நோக்கில் அரசாங்கம் பாரியளவில் போராட்டங்களை ஏற்பாடு செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இறைமையை பாதிக்கும் வகையில் அமெரிக்கா செயற்படவில்லைஎனவும், ஜனாதிபதியைக் கொலை செய்ய திட்டமிடப்படவில்லை எனவும் அவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை விவகாரங்கள் தொடர்பில்அரசாங்கம் திரிபுடுத்திய செய்திகளையே வெளியிட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# சிகரெட் பாவனையை கட்டுப்படுத்த புதுவழி

(கொழும்பு)

சிகரெட் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக, சிகரெட் புகைப்பதால் ஏற்படும் சுகாதார கேடுகள் தொடர்பான புகைப்பட எச்சரிக்கையை சிகரெட் பக்கெற்றுகளில் பொறிக்கப்படுவது இன்னும் இரு மாதங்களில் அறிமுகமாகும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

புகையிலை தொழிற்துறை மூலம் அரசாங்கம் வருடாந்தம் 47 பில்லியன் ரூபாவை வருமானமாக பெற்றுக்கொள்வதாகவும் ஆனால் புகைத்தல் தொடர்பான நோய்களுக்காக ஒவ்வொரு வருடமும் செலவிடப்படும் தொகை மேற்படி வருமானத்தின் சுமார் நான்கு மடங்காகும் எனவும் பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க கூறினார்.

# புலிகளின் எதிர்கால செயற்பாடு அவுஸ்ரேலிய தமிழர் நிதியுதவி

## தூதுவர் திஸர சமரசிங்க குற்றச்சாட்டு



(சிட்னி)

புலிகளின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக, புலம்பெயர்ந்து அவுஸ்ரேலியாவில் குடியேறியுள்ளோரில் ஒரு தொகுதி தமிழர்கள் நிதி உதவி செய்து வருவதாக அவுஸ்ரேலியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் அட்மிரல் திஸர சமரசிங்க குற்றம்சாட்டியுள்ளார்.அட்மிரல் திஸர சமரசிங்க அவுஸ்ரேலிய வானொலி ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில், புலம்பெயர் நாடுகளில் மொத்தமாக சுமார் 8 இலட்சம் இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் கிழமைக்கு தலா ஒரு டொலர் சேகரிக்கப்படுவதாக வைத்துக் கொள்வோம்.

இதன் அடிப்படையில் பார்த்தால் ஒருவரிடமிருந்து 52 டொலர்கள் ஒரு ஆண்டுக்கு சேர்க்கப்படுகிறது. அதன்படி 8 இலட்சம் பேரிடம் ஆண்டுக்கு சேர்க்கப்படுவது மிகப் பெரிய தொகை. இது புலிகளுக்கு கிடைக்கின்றமை வெளிப்படையாகத் தெரிகிறது.

எனினும், இப்பணத்தில் இருந்து ஒரு சதம் கூட இலங்கையில் இடம்பெறுகின்ற மீள்குடியேற்ற நடவடிக்கைக்கு கிடைக்கப் போவது இல்லை என்பது திண்ணம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# முல்லை மாணவியின் மனு விசாரணை ஒத்திவைப்பு

பல்கலைக்கழகத்தில் பல் வைத்தியத்துறையில் கல்வி பயில அனுமதி மறுக்கப்பட்டதால் முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணவி தாக்கல் செய்த ஆணைகோரும் மனுமீதான விசாரணையை மேன் முறையீட்டு நீதிமன்றம் ஏப்ரல் 23ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

முல்லைத்தீவைச் சொந்த இடமாகக் கொண்ட, தான் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றவகையில் பல்கலைக்கழகத்தில் பல்மருத்துவ பட்டப்படிப்பைத் தொடர்வதற்கு அனுமதிக்காமல் முல்லைத்தீவைச் சேராத ஒருவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அனுஜா யோகநாதன் குறிப்பிட்டுள்ளார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, அதன் மேலதிக செயலார் டாக்டர் பிரியந்த பிரேம குமார, பல்கலைக்கழக பல்வைத்திய விஞ்ஞானப் பிரிவுக்குத் தெரிவான பரீட்சார்த்தியான வி.ஜயவதனி ஆகியோரை அவர் பிரதி வாதிகளாக குறிப்பிட்டுள்ளார்.

# வைத்தியர் கைது

(பதுளை)

மருந்து வாங்கச் சென்ற நோயாளி ஒருவரை வைத்தியர் அடி அடி என்று அடித்து காயப்படுத்திய சம்பவமொன்று பதுளை வைத்தியசாலையில் பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை சுகயீனம் காரணமாக சிகிச்சைப் பெற நபர் ஒருவர் முச்சக்கர வண்டியில் பதுளை வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவிற்குச் சென்றுள்ளார்.

இதன்போது நோயாளிக்கு மருந்து வழங்கி சிகிச்சை அளிப்பதை விடுத்து வைத்தியர் அவரை நன்கு தாக்கி சிகிச்சை அளித்துள்ளார்.

நோயாளி பயணித்த முச்சக்கர வண்டியையும் வைத்தியர் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து கைது செய்யப்பட்ட வைத்தியர் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

28) பௌர்ணமி தினம் மாதத்தில் 20 ஆம் திகதியன்று வந்ததெனில், படத்திலுள்ளபடி சந்திரன் காணப்படும் தினம்?



1) 4ஆம் திகதியாகும்
2) 8ஆம் திகதியாகும்
3) 12ஆம். திகதியாகும்
4) 16ஆம் திகதியாகும்

29) இலங்கையில் பல பிரதேசங்களில் ஆறுகளும் அருவிகளும் வற்றிக்கொண்டு போகின்றன. இதற்குக் காரணம்,
1. மக்கள் விவசாயத்திற்காக அதிகளவு நீரைப் பயன்படுத்துகின்றமை
2. மக்கள் தொடர்ந்து மரங்களை வெட்டி வீழ்த்தி வருகின்றமை

30) 'தினைவிதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்பதன் கருத்து,
1. ஒருவர் தான் செய்த செயலின் பயனை அனுபவிப்பார் என்பதாகும்
2. முயற்சி திருவினையாக்கும் என்பதாகும்

31) நாளைய தினம் சூரிய வெய்யில் இல்லாவிட்டால் பின்வருவனவற்றுள் எது நடந்திட அதிக வாய்ப்பு உண்டு?
1. தொடர்ந்து மின்சார விளக்கு எரிந்து கொண்டிருக்கும் 2. தொடர்ந்து இருட்டாக இருக்கும்
3. மக்கள் தொடர்ந்து தூங்கிக் கொண்டிருப்பர்

32) நான்கு கால் விலங்குகள் யாவும் சோறு உண்ண ஆரம்பித்தால், அதன் விளைவாக உடனடியாக நடந்திட வாய்ப்புள்ளது பின்வருவனவற்றுள் எது?
1. மனிதர் அதிகமாக நெல் உற்பத்தி செய்தல் 2. நெல்லுற்பத்தியில் புதியமுறை கண்டுபிடித்தல்
3. அரிசித் தட்டுப்பாடு ஏற்படுதல்

33) ஒரு பூங்காவனத்தில் சில புறாக்கள் பறந்து சென்றன. அவற்றில் ஒன்றுக்கு முன்னால் இரண்டும், ஒன்றுக்குப் பின்னால் இரண்டும், நடுவில் ஒன்றுமாகப் பறந்து சென்றன. அங்கே பறந்து சென்ற ஆகக் குறைந்த புறாக்களின் எண்ணிக்கை யாது?
1. 5 2. 3 3. 4 4. 6

34) தந்தையிடம் மகனிடமுள்ள பணத்தைப் போல் நான்கு மடங்குடன் 10 ரூபா அதிகமாக இருந்தது. இருவரிடமும் இருந்த மொத்தத் தொகை 60 ரூபாக்களாகும். ஆகவே மகனிடம் உள்ள தொகை எவ்வளவு?
1. ரூபா 10 2. ரூபா 15 3. ரூபா 20

35) கமலனும், விமலனும் புத்தகக் கடைக்குச் சென்று கமலன் பேனாவும், விமலன் புத்தகமும் வாங்கினார்கள். புத்தகத்தின் விலை பேனாவின் விலையைப் போல் மும்மடங்கைவிட ரூபா 12 அதிகமாகும். பேனாவின் விலை ரூபா 6 எனின், அவர்கள் இருவரும் செலவழித்த மொத்தப் பணத் தொகை எவ்வளவு?
1. ரூபா 30 2. ரூபா 36 3. ரூபா 46

## கடந்த புதன்கிழமை வெளியான வெளியீடு - 34 கேள்விகளின் விடைகள்

01) 1. காசு வைப்பிலிடல்
2. மக்கள் வங்கி
3. 12.05.2007 4. 20
5. கந்தையா சிவசாமி
6. 1370218185
7. ரூபா முப்பத்து மூவாயிரம் 33,000.00
8. 1. பணம் வைப்புச் செய்தவர் ஒப்பம் மாறி வைத்துள்ளார்.
2. வைப்புச் செய்த பணத்தின் பெறுமதி சொற்களில் எழுதப்படவில்லை.
3. எதுவும் எழுதவேண்டாம் என எழுதப்பட்டுள்ள இடத்தில் எழுதப்பட்டுள்ளது.

02. 1. தயவுசெய்து அமைதியாக இருங்கள்
2. தயவு செய்து கரும்பலகையைச் சுத்தம் செய் யுங்கள்.

03. 1. Please come hear
2. Please sit down

04. 1. அஸ்வலின் பலமு
2. கன்வலின் அசமு

05. 1) 2 2) 3 3) 2 4) 1
5) 3 6) 4 7) 4 8) 2
9) 3 10) 4

06) 1. கண்டங்கத்தரி
2. அலரி 3. கற்றாளை
4. கெண்டித்தாவரம்
5. கிளிச்சாடிச்செடி

07) 1. கிளி 2. கழுகு
3. தேன்சிட்டு 4. நாரை
5. வாத்து

08) 1. A 2. A 3. B 4. A 5. B
6. B 7. A 8. A

09) 1. அரும்பு 2. கல்பிந்து
3. குந்திரிக்கம் 4. சீப்புரு
5. சவடி 6. இரட்டைச்சுழி
7. ஈரிழை 8. தனியிழை
9. பூவும் மொட்டும்
10. பதுற 11. லியபொத்த
12. நெலும்பொத்தி

10) 200ml 2) 20 தடவை 3) 3 தடவை

11) 1. 2 மணித்தியாலம் 2. 75
3. ரூபா 294.00

12) 1) 0 2) 1 3) 0

13) 1. மோட்டார் சைக்கிள்
2. 8 3. 29

14) 5 ml



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I

1 மணி

# கல்வி முரசு

வெளியீடு 35




இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.


**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.**

1 ஆம், 2ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உருக்கள் உள்ள மூன்று அடைப்புக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அதில் உள்ள உருக்களுக்கு ஏற்ப ஏனைய இரண்டில் இருந்தும் வேறுபடுகின்றது. இவ்வாறு வேறுபடும் அடைப்பினைத் தெரிவுசெய்க.


01)



1)



2)




3)


02)



1)




2)





3)

03) கூட்டுக்குள் தரப்பட்டுள்ள இயல்புகள் யாவற்றுடனும் பொருந்தும் உருவைத் தெரிவு செய்க.

- விரைவு
- தொடர்பாடல்
- நேரடித் தகவல் பரிமாற்றம்

1) 

2) 

3) 

04) ● + ● = 10
● + ▲ = 15
▲ + ■ = 20

அருகேயுள்ள தொடர்பின்படி ● X ▲ X ■ என்பதன் பெறுமதி?
1. 25 2. 50 3. 500

05) பேராசை பெருநட்டம் என்பது, பழமொழியாகும். இங்கு ஆசை என்பதன் பொருள்,
1. அவா 2. நிராசை 3. விருப்பு

06) மனிதனிடம் இருக்கக் கூடாத குணங்களின் ஒன்று கோபம், இங்கு கோபம் என்பதன் எதிர்ப்பொருள்?
1. சாந்தம் 2. பொறுமை 3. அமைதி

07)

| | | | |
|---|---|---|---|
| 8 | 10 | 12 | 14 |
| 6 | 4 | 2 | 16 |
| 24 | 22 | 20 | 18 |

| | | | |
|---|---|---|---|
| A | 15 | 18 | B |
| 9 | 6 | 3 | 24 |
| 36 | 33 | C | 27 |

1) A - 12, B - 21, C - 32

2) A - 12, B - 21, C - 30

3) A - 21, B - 12, C - 30

08) விமலன் மருத்துவமனையில் ஒரு மாதம் வரை தங்கி இருந்து சிகிச்சை பெற்றான். இதற்குக் காரணம்?
1. அவனது வீட்டைவிட வைத்தியசாலை வசதியுடையதாக இருந்தமை
2. அவனைப் பாதித்த கடுமையான நோயின் சிகிச்சைக்குரிய வசதிகள் யாவும் அங்கு கிடைத்தமை
3. அவனிற்கு மருத்துவரையும் அங்கு பணிபுரியும் ஊழியரையும் மிகவும் பிடித்தமை

09) 5 மனிதர் சேர்ந்து ஒரு வயலை 6 நாட்களில் பண்படுத்தி முடிப்பர் எனின், இந்த வயலை 2 மனிதர் எத்தனை நாளில் பண்படுத்தி முடிப்பர்?
1. 30 நாட்கள் 2. 15 நாட்கள் 3. 45 நாட்கள்


10) செல்வியை விட கமலி 6 ஆண்டுகள் மூத்தவள். இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 34 ஆண்டுகள் எனின், கமலியின் தற்போதைய வயது என்ன?
1. 14 ஆண்டுகள் 2. 17 ஆண்டுகள் 3. 20 ஆண்டுகள்

11) உடற்பயிற்சியில் போட்டி ஒன்றுக்காக மாணவர்கள் வரிசையாக நின்றிருந்தார்கள். இவர்களில் மாதவனின் வலது கைப்பக்கம் 8 மாணவர்களும், இடது கைப்பக்கம் கேசவனும் கோவிந்தனும் நின்றிருந்தனர். ஆகவே அந்த வரிசையில் நின்ற மாணவரின் எண்ணிக்கை எத்தனை?
1. 11 பேர் 2. 10 பேர் 3. 8 பேர்

12) 
அருகே காட்டப்பட்டுள்ள சாலைக் குறியீட்டின் பொருள்?
1. முந்திச் செல்லத் தடை
2. வாகனம் நிறுத்தவும் தரிக்கவும் தடை
3. ஒலி எழுப்பத் தடை

13) மகரகம என்னும் சொல் ABXBA எனவும் கரகம என்னும் சொல் BXBY எனவும் எழுதப்படின் கரகாட்டக்காரி என்னும் சொல் எழுதப்பட்டுள்ள விதத்தைத் தெரிவு செய்க.
1. BXZCDEZF 2. BXZCDEEF 3. BXZZDEZF

14) கீழே உள்ள கோலத்தை அவதானித்து அடுத்துவரும் பின்னத்தை எழுதுக.





1. 2/20 2. 1/100 3. 1/1000

15) பரீட்சை ஒன்றில் ஒரு பாடத்தில் 40 வினாக்களுக்கு சமப் புள்ளிப்படி மொத்தம் 100 புள்ளிகள் ஆகக் கணிக் கப்படுகிறது. ஒரு மாணவன் அப்பரீட்சையில் 65 புள்ளிகள் பெற்றான். அவன் எத்தனை வினாக்களுக்குச் சரியான விடையளித்தான்?
1. 30 2. 26 3. 32

16) 20 பயணிகளைக் கொண்ட பேருந்தின் சில்லுகளின் எண்ணிக்கை 6 ஆகும். இதே பேருந்தில் 50 பேர் பயணம் செய்தால் பேருந்தில் இருக்கும் சில்லுகளின் எண்ணிக்கை யாது?
1. 6 2. 15 3. 12


17) தாயின் வயதுடன் மகளின் வயதைக் கூட்ட வருவது 60 ஆகும். தாயின் வயது மகளின் வயதின் இரு மடங்கெனில் தாயின் வயது யாது?
1. 20 2. 40 3. 60

18) 


வட்டத்திற்குள் மட்டும் உள்ள எண்களைக் கூட்டினால் பெறப்படும் விடை என்ன?
1) 7
2) 14
3) 9

19) சந்திரன் வீட்டிலிருந்து 2 கிலோமீற்றர் தூரத்திலுள்ளதபாற்கந்தோருக்கு ஒரே வேகத்தில் நடந்துபோய் வருவதற்கு 40 நிமிடங்கள் எடுக்கும் எனின், 5 கிலோமீற்றர் தூரத்திலுள்ள சந்தைக்குப் போய் வருவதற்கு எடுக்கும் நேரம் எவ்வளவு?
1. 50 நிமிடம் 2. 20 நிமிடம் 3. 100 நிமிடம்


20) அஜித், மஜித், சஜித் ஆகிய மூவரும் ஒரு பொருளைச் சமமாகப் பங்கிட்டுக் கொண்டனர் என்பதைக் கீழே காட்டும் சரியான வரிப்படம் எது?




21 - 24 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.




A, B, C, D ஆகிய பாடசாலைகளிலே அண்மையில் பரீட்சை ஒன்றில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை




A, B, C, D ஆகிய பாடசாலைகளில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை

21) சித்தியடைந்த பிள்ளைகளில் பெண் பிள்ளைகள் 3/5 பங்கினர் ஆவர். 4 பாடசாலைகளிலும் சித்தியடைந்த பெண்களின் எண்ணிக்கை எவ்வளவு?
1. 150 2. 100 3. 160

22) சித்தியடைந்த பிள்ளைகளில் பெண் பிள்ளைகள் 3/5 பங்கினர் ஆவர். 4 பாடசாலைகளிலும் சித்தியடைந்த ஆண்களின் எண்ணிக்கை எவை?
1. 150 2. 160 3. 100

23) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 1/5 பங்கினர் மட்டும் சித்தியடைந்த பாடசாலைகள் எவை?
1. B, C 2. A, C 3. A, B

24) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 1/3 பங்கினர் மட்டும் சித்தியடைந்த பாடசாலை எது?
1. B 2. A 3. C

**25 - 27 வரையான வினாக்களுக்குக் கீழ்வரும் பந்தியை வாசித்து விடையளிக்க.**

செல்வனின் வயது தாயின் வயதின் 1/5 பங்காகும். ராதாவின் வயது தாயின் வயதின் 1/8 பங்காகும். தற்போது ராதாவின் வயது 5 ஆகும்.

25) தாயின் தற்போதைய வயது என்ன?
1. 40 2. 13 3. 30

26) இரு வருடங்களின் பின் செல்வனின் வயது என்ன?
1. 10 2. 12 3. 8

27) 3 வருடங்களின் முன் ராதாவின் வயது என்ன?
1. 5 2. 2 3. 3


விசேட வினாத்தாள் I - தரம் 05 - 2012 - கல்விமுரசு



# பச்சைப் புதர்களினுள் புதைந்து கிடக்கும் பல பச்சைப் பாம்புகள்

இன்று வடபுலத்தில் நீதிமன்றங்கள் காவல்துறை அரச பொது உள்ளூர் நிர்வாக அலகுகள் என்பன எவரின் எவ்வித தலையீடுமின்றி சுமுகமாக இயங்குகின்றன. இவ்வாறான சூழ்நிலையிலும் யாழ் நகரின் மையப் புள்ளியிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும்,

1. சில அங்கீகாரமற்ற தனியார்களதும் பிரசித்த நிறுவனங்களதும் ஆய்வு கூடங்கள் உரிமமற்று மிகக் கவர்ச்சிமிக்க கட்டடங்களில் குளிரூட்டிகளுடன் இயங்குகின்றன. ஆய்வுத்துறை சாரா நபர்களே ஆய்வுகளை மேற்கொள்ளுகின்றனர். இந் நிலையங்களினால் வழங்கப்படும் அறிக்கைகளின் அடிப்படையில் வழங்கப்படுபவை ஆபத்தானவையாகவும் அமையலாம்.

2. பல அரச அங்கீகாரம் அற்ற (Pharmacists) மருந்தாக்கக் கலைஞர்களின்றி, காலூன்றி கால்நூற்றாண்டுகள் ஆகிவிட்ட நிலையிலே கொலைக்களமாகி விட்டன. இங்கு தொற்றை விளைவிக்கும் அங்கீகாரமற்ற சத்திர சிகிச்சை மருத்துவ மனைகளும் மலிந்துவிட்டன..


3. உரிமம் அற்றதும், சில உரிமங்களுடனான மருந்து விற்பனை நிலையங்களும் அலோபதி மருத்துவர்களின் மருந்துச்சிட்டையின்றி மருந்துகளை விற்பனை செய்கின்றன. தன்னிச்சையான மருந்துகளின் பாவனைக்கும், துறைசாரா மருத்துவர்களும் போலிகளும் அலோபதி மருந்துகளைத் தங்கு தடையின்றிப் பெற இவை களமாக உள்ளன.

4. அங்கீகாரமற்ற ஆய்வுகூடங்களில் துறைசாராதவர்களால் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் முடிவுகள் தவறானவையாக அமைகின்ற வேளை நோயாளிகள் அவற்றின் அடிப்படையில் வழங்கப்பட்ட ஏதோ ஒரு வகையான அல்லது பல்வேறு வகையான உயிர் எதிரிகளின் (antibiotic) தீய பக்க விளைவுகளுக்கு உள்ளாகின்றனர்.

5. உரிமம் அற்று இயங்குகின்ற தனியார் அலோபதி மருத்துவமனைகள் என்ற போலி மருத்துவ மனைகளில்,

அ. இரவு வேளைகளில் சிகிச்சை வழங்குபவர்களில் பலர் The Srilanka Medical council இடம் உரிமம் பெறாதவர்கள்.

ஆ. உயிர் ஆபத்தை விளைவிக்க வல்ல நோய்களுக்கு அவசர சிகிச்சை வழங்க ஏதுவான வளங்களோ ஆளணியினரோ வசதிகளோ இல்லை என்பது மூடி மறைக்கப்படுகின்றது.



உண்மை நிலையை அறியாது நாடுபவர்களில் பலரும் அரச மருத்துவ மனைகளிலும் போதனா மருத்துவமனைகளிலும் நோயாளிகளும் பார்வையாளர்களும் முகம்கொடுத்த சில அசௌகரியங்களை மிகைப்படுத்துபவர்களால் வழிநடத்தப்பட்டு, பலர் தமது பணத்தையும் நேரத்தையும் வீணே விரயம் செய்தவர்களாகியுள்ளனர்.

GMOA

எம்மவர்கள் மெல்ல மெல்லச் சாகவும நோயால் நொடியவும் வழிவகுத்தவர்கள்; வழிவகுப்பவர்கள் "I will not use my profession for exploitation and abuse of my patients" என்று சத்தியம் செய்த சில சத்தியசீலர்களே!

நோயாளிகளின் உச்ச நலனை நாடி சுகாதார சேவையை வழங்க வேண்டிய அரச அதிகாரிகள், சட்ட விதிகள் மீறப்படுகின்றன என்பதையும் மீறப்படுவதனால் பொதுமக்களும் நோயாளிகளும் தீய பக்க விளைவுகளுக்கு உள்ளாகின்றனர் என்பதையும் நன்கு புரிந்துள்ளனர். நீதி நிர்வாக அலகுகள் காவல்துறை என்பன சுமுகமாக இயங்குகின்ற வேளைகளில் (அச்சுறுத்தும் ஆயுதக் குழுக்கள் அற்ற நிலையில்) மனச்சான்று (conscience) என்ற ஒருவகைக் கட்டுப்படும் உளநிலையைத் தாண்டியமையால் கடமை உணர்வற்று (sense of duty) அவர்களது அன்றன்றாட வருமானங்களுக்கு குந்தகம் ஏற்படுட்டு விடும் என அஞ்சி மக்களின் நலனில் நாட்டமற்று இருக்கின்றனர்.

இந் நிலை அகல வடபுலத்து மருத்துவ நிர்வாக அலகினர் பக்கசார்பும் பயமின்றியும் பேரார்வத்துடனும் நேர்மையுடனும் உற்சாகத்துடனும் சட்டத்தின் அலகுகளுக்கும் சட்டத்தின் புனிதத் தன்மைக்கும் ஏற்ப செயலாற்ற, "I will use my power to help the sick to the best of my ability and judgment; I will abstain from harming or wrong doing any man by it" அவர்களின் காதுகளில் அவர்கள் மேற்கொண்ட சத்தியப்பிரமாணங்களின் சில வரிகள் ரீங்காரமிட வேண்டும். அறிவுறுத்துகின்ற அறத்தின் வழி நின்றிடா வேளை அம் மருத்துவன் மாண்பினை இழக்கின்றான். தனிமனித சமூக நலவாழ்வு நலிவுறுகிறது.

மருத்துவ சேவையினதும் பொதுமக்களினதும் நலன் கருதி உரிமம் பெற்ற மருத்துவர்கள் ஒவ்வொருவரும் தம்மவரின் செயலாற்றலின்மை பற்றி மருத்துவ சபைக்கு அறிவிக்க வேண்டிய கடப்பாடுடையவர்கள்.

பொதுமக்கள் அடிப்படை உரிமைகளின்கீழ் நோயாளிகளின் உச்ச நலனை நிலைநாட்ட விழிப்புணர்ச்சி மற்றும் கல்வியூட்டல் என்பனவற்றை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடுடையவர்கள். அத்துடன் தகுந்த ஆதாரங்களுடன் செயலாற்றலின்மையையும், முறைகேடுகளினையும் மேலதிகாரிகளுக்கும் மனித ஆணைக் குழுவில் முறையிடவும் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்து நிவாரணம் கோரவும் பெறவும் உரித்துடையவர்கள்.

அவலநிலை நீங்க ஆவன புரிய வேண்டியவர்கள் யாரோ?

**- கந்தர் விசுவலிங்கம் கந்தவேள்**
**மனித உரிமை ஆர்வலர்**

## எழுதும் கலை -2



**1. இலக்கியத்தின் ஜீவநாடி உணர்ச்சியும் சிருஷ்டி சக்தியும். இந்த இரண்டும் இல்லாவிட்டால் அது வெறும் குப்பை.**

**2. எழுத்துக்குக் கைப்பழக்கம் மிகவும் அவசியம். முடுக்கிவிட்ட இயந்திரம் மாதிரி தானே ஓரிடத்தில் வந்து நிற்கும்.**

**3. ஒரு தனிச் சம்பவம் அல்லது உணர்ச்சி அல்லது குணவிஸ்தாரம் அல்லது வர்ணனை எடுத்தாளப்படும் லிரிக் என்ற கவிதைப் பகுதி போல் சிறுகதை. சிறுகதையின் ரூபம் எழுதுபவனின் மனோதர்மத்தைப் பொறுத்தது.**

**4. சிறுகதைப் பின்னலில் ஆரம்பம், மத்திய சம்பவம், அதன் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி என்ற மூன்று பகுதிகள் உண்டு. இம் மூன்றும் படிப்படியாக வளர்ந்து கொண்டே போகும். சமீபத்தில் எழுதப்பட்ட அமெரிக்கச் சிறுகதைகளில் பழைய சம்பிரதாயமான ஆரம்பம், முடிவு என்ற இரண்டு பகுதிகளும் கிடையவே கிடையாது. கதை திடீரென்று மத்திய சம்பவத்தின் உச்சஸ்தானத்தில் ஆரம்பிக்கிறது. அதிலேயே முடிவடை கிறது. இன்னும் வேறு விதமான கதைகளும் உண்டு. அவற்றில் முடிவு என்பதே கிடையாது. அதாவது, கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவிப்பதற்கு ஒரு தூண்டுகோல். கதை முடியும் போது அதைப் பற்றிய சிந்தனை முடிவடைந்து விடாது. இப்படிப் பட்ட கதைகள் முடிந்த பிறகுதான் ஆரம்பமாகிறது என்று சொன்னால் விசித்திரமாகத் தோன்றும். ஆனால் அதுதான் உண்மை. கடவுள் வாழ்க்கையின் கடைசிப் பக்கத்தை எழுதி விடவில்லை. அவரால் எழுதவும் சாத்யப் படாத காரியம்... கதைகளுக்குச் சம்பவம் அவசியமா? இப்படிப்பட்ட விகற்பங்கள் இருக்கலாமா? என்று பலர் கேட்கிறார்கள். கதைகள் அவரவருடைய சுவையையும் ரசனையையும்தான் பொறுத்தது. அவரவருடைய அனுபவத்திற்கும், ரசனைக்கும் ஏற்றபடிதான் கதைகளைப் படிக்க முடியும்.**

**5. பலர் இலக்கியத்தில் இன்னதுதான் சொல்ல வேண்டும், இன்னது சொல்லக்கூடாது என்று ஒரு தத்துவம் இருப்பதாகவும், அதை ஆதரித்துப் பேசுவதாகவும் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கலாம். உண்மை அதுவல்ல. சுமார் இருநூறு வருஷங்களாக ஒருவித சீலைப்பேன் வாழ்வு நடத்தி விட்டோம். சில விஷயங்களை நேர்நோக்கிப் பார்க்கவும் கூசுகிறோம். அதனால்தான் இப்படிச் சக்கரவட்டமாகச் சுற்றிப் பேசுகிறோம். குரூரமே அவதாரமான ராவணனையும், ரத்தக் களரியையும், மனக் குரூரங்களையும், விகற்பங்களையும் உண்டாக்க இடமிருக்குமேயானால் ஏழை விபச்சாரியின் ஜீவனோபாயத்தை வர்ணிப்பதாலா சமூகத்தின் தெம்பு இற்றுப்போகப் போகிறது? இற்றுப் போனது எப்படிப் பாதுகாத்தாலும் நிற்கப் போகிறதா? மேலும், இலக்கியமென்பது மன அவசத்தின் எழுச்சிதானே?**

**6. நாலு திசையிலும் ஸ்டோர் குமாஸ்தா ராமன், சினிமா நடிகை சீதம்மாள், பேரம் பேசும் பிரம்மநாயகம் இத்தியாதி நபர்களை நாள் தவறாமல் பார்த்துக் கொண்டிருந்து விட்டு இவர்களது வழ்க்கைக்கு இடமளிக்காமல் காதல், கத்தரிக்காய் பண்ணிக் கொண்டிருப்பது போன்ற அனுபவத்துக்கு நேர் முரணான விவகாரம் வேறு ஒன்றும் இல்லை. நடைமுறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் எதுவும் இல்லை.**

**7. பயன் கருதாது தன்மயமாகி லயித்து ஒட்டிப் புளுகுவதுதான் கதை.**

**8. சிறுகதை வாழ்க்கையின் சிறிய சாளரம். வாழ்வுக்குப் பொருள் கொடுப்பதுதான் கலை. சிறுகதை வாழ்வின் பல சூட்சுமங்களையும் எழுத்தில் நிர்மாணித்துக் காண்பிக்கிறது.**

- புதுமைப்பித்தன

## ரஜினிகாந்த் - பெங்குயின் வெளியிடும் ஆங்கில நூல்




ரஜினியின் பிறந்தநாள் ரஜினியின் ரசிகர்களுக்குத் தீபாவளியைப் போன்றது. இந்த ஆண்டு ரஜினியின் 63 ஆம் ஆண்டு பிறந்த நாள் அன்று (டிசம்பர் 12), அவரது ரசிகர்களுக்கு கூடுதல் போனசாக பெங்குயின் பதிப்பகம் ரஜினியின் வாழ்க்கை சரித புத்தகம் ஒன்றை வெளியிட உள்ளது. லண்டனைச் சேர்ந்த சினிமா விமர்சகரும் தயாரிப்பாளருமான நமன் ராமச்சந்திரன் இப்புத்தகத்தை எழுதிவருகிறார்.

ஆங்கிலத்தில் வெளியிடப்படும் அதே வேளையில், இப்புத்தகத்தைத் தமிழில் வெளியிடவும் பெங்குயின் நிறுவனம் முயற்சித்து வருகிறது.

நமன் ராமச்சந்திரன், பெங்குயின் வெளியிடவிருக்கும் ரஜினி சரிதை நூலுக்காக, ரஜினியின் உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் நேரடியாகப் பேசி எழுதிவருகிறார். ரஜினியை கடவுளாக ஏன் ரசிகர்கள் கொண்டாடுகிறார்கள் என்பதையும் ரசிகர்களிடமே பேசி எழுதுகிறார்.

ரஜினியைப் பற்றி இதுவரை காயத்ரி ஸ்ரீகாந்த் எழுதியுள்ள த நேம் இஸ் ரஜினிகாந்தும், பி.சி. பாலசுப்ரமணியன் எழுதிய பஞ்ச்தந்திராவும் குறிப்பிடத்தகுந்தவை. இந்த இரு நூல்களும் ரஜினி ரசிகர்களின் பெரும் ஆதரவைப் பெற்றவை. 12.12.12 அன்று பெங்குயின் நூல் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# புலிகளின் மனிதஉரிமை மீறல்களுக்கு கூட்டமைப்பு ஜெனீவா சென்று பொறுப்பேற்க வேண்டும்!

ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் 19ஆவது கூட்டத்தொடரில் கலந்து கொண்டு, இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக பெரும் 'யுத்தம்' செய்யப் போவதாக வரிந்து கட்டிக்கொண்டு நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இப்பொழுது அங்கு செல்வதில்லை என அறிவித்துள்ளது. இந்த திடீர் அந்தர் பல்டி ஏன் எனப் பலரும மண்டையைப் போட்டு குடைவது நிச்சயம்.

கூட்டமைப்பின் இந்தத திடீர் முடிவு இலங்கைத் தாய்நாட்டின் மீது கொண்ட பற்றுதலால் அல்ல என்பது மட்டும் நிச்சயம். அண்மையில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில், "கூட்டமைப்பினர் ஜெனீவா சென்று புலிகள செய்த கொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப் பேற்க வேண்டும். ஏனெனில் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என கூட்டமைப்பு ஏற்றுப் பேசி வந்துள்ளது" எனத் தெரிவித்திருந்தார்.

அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இந்தக் கருத்துக்குப் பிறகுதான், கூட்டமைப்பினர் இந்த முடிவுக்கு வந்திருக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை.

ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கையின் இறுதி யுத்த நேர உரிமை மீறல்கள் குறித்து தனக்கு ஆலோசனை வழங்கவென நியமித்த தருஸ்மன் தலைமையிலான மூவர் கொண்ட குழு தயாரித்து



கையளித்த அறிக்கையில், இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக மட்டுமின்றி, புலிகளுக்கு எதிராகவும் பாரதூரமான குற்றச் சாட்டுகளைச் சுமத்தியிருந்தது.

ஆனால் இப்பொழுது ஜெனீவா கூட்டம் பற்றியும், இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் குறித்தும் பேசும் பலர், புலிகள் இழைத்த குற்றங்கள் பற்றி ஒரு சொல்கூடப் பேசுவதில்லை. இந்த யுத்தத்தின் ஒரு தரப்பாக புலிகள்தான் இருந்தார்கள் என்பதைக்கூட பலர் மறந்தது மாதிரி நடந்து கொள்கிறார்கள்.

புலிகளின் செயற்பாடுகளை மிதவாதத் தமிழ் தலைமை எனச் சொல்லிக் கொள்ளும் பிற்போக்குத் தமிழ் தலைமை வேடிக்கை பார்த்துக்கொண்டே காலத்தைக் கழித்தது. அத்துடன் நிறுத்திக் கொண்டது என்றாலும் பரவாயில்லை. ஆனால் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் திரும்பத் திரும்பக் கூறி வந்துள்ளது.

புலிகள் பல்லாயிரக் கணக்கான மக்களை தமது பாதுகாப்புக்காக ஒரு குறுகலான பிரதேசத்தில் தடுத்து வைத்திருப்பதால் பாரிய மனிதப் பேரழிவு ஏற்படும் என்பதைக் கூட்டமைப்பு நன்கு அறிந்திருந்தும், அந்த மக்களை விடுவிக்கும்படி புலிகளை ஒரு போதும் கோரவில்லை.

எனவே புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதி என்று அறிவித்ததின் காரணமாகவும், புலிகளின் மனித உரிமை விரோதச் செயறபா'டுகளை தொடர்ந்து ஆதரித்து வந்ததிற்காகவும், இன்று உலகின் முன்னால் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான். ஆகையால் அவர்கள் நழுவல் போக்கைக் கடைப்பிடிக்காமல் ஜெனீவாவுக்குச் சென்று, புலிகள் 30 ஆண்டுகளாக செய்து வந்த படுகொலைகள், மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பு ஏற்க வேண்டும்.

**- வீ.சின்னத்தம்பி**
**கட்டுரையிலிருந்து.**

# முதல்வர் ஜெயலலிதாவில் தங்கியுள்ள 15 இலட்சம் மக்களின் பாதுகாப்பு



(சென்னை)

கூடங்குளம் அணுமின் நிலையப் பிரச்சினையில் முதல்வரை மட்டுமே நம்பியுள்ளோம் என்று அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் தெரிவித்தார்.

தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவை போராட்டக் குழுவினர் நேற்று முன்தினம் சந்தித்தனர். சுமார் 15 நிமிடங்கள் வரை இந்தச் சந்திப்பு நடந்தது. சந்திப்புக்குப்பின் செய்தியாளர்களிடம் உதயகுமார் கூறியதாவது,

கூடங்குளம் அணுமின் நிலையப் பிரச்சினை தொடர்பாக எங்கள் தரப்பு வாதங்களை முதல்வரிடம் முன்வைத்தோம். மின் உற்பத்திக்காக தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு பாராட்டுத் தெரிவித்தோம்.

: கூடங்குளம் அணுமின் நிலையப் பிரச்னை தொடர்பாக ஆராய மாநில அரசு அமைத்த குழு, அணுமின் நிலையத்தை 2 மணிநேரம் சுற்றிப் பார்த்தது. எங்களுடைய நிபுணர் குழுவையோ அல்லது மக்களையோ அவர்கள் சந்திக்கவில்லை. ஒரு தலைப்பட்சமாக அறிக்கையைத் தயார் செயது அளித்துள்ளனர்.

கூடங்குளம் பகுதி மக்களின் அச்சத்தைப் போக்காமல் அங்கு பணிகளை நடத்தக் கூடாது என அமைச்சரவையில் தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்றியது.


அந்தத் தீர்மானத்தை மதிக்காமல் கூடங்குளம் அணுமின் திட்ட நிர்வாகம், இரகசியமாக உள்ளே வேலை செய்து வந்திருப்பதை முதல்வரிடம் சுட்டிக் காட்டினோம்.

அணுமின் நிலையத்தில் இருந்து வெளியேறும் சூடான கதிர்வீச்சு கடல் நீரில் கலக்கும் போது கடல்நீர் கெட்டுப்போகும்.

இதனால் மீனவர்களுக்கு கடலில் மீன் இல்லாமல் போகவும், மக்களுக்கு உணவு கிடைக்காமல் போகும் நிலையும் ஏற்படும். மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

எனவே, கூடங்குளம் அணுமின் நிலையத்தை இயற்கை எரிவாயுவால் இயக்கப்படும் மின் நிலையமாக மாற்றலாம். அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் அப்படி மாற்றப்பட்டுள்ளன. எனவே, இந்தப் பிரச்சினையில் முதல்வர் ஜெயலலிதாவை மட் டுமே நம்பி உள்ளோம்.

கூடங்குளம் அணுமின் நிலையத்தைச் சுற்றி 30 கிலோ மீற்றர் பரப்பில் சுமார் 15 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். அணு உலையில் பாதிப்பு ஏற்படும் போது இவ்வளவு மக்களை அப்புறப்படுத்த முடியாது என்றார் உதயகுமார்.




# அறுபதை கடந்தார் ஸ்டாலின்



(சென்னை)

முன்னாள் துணை முதலமைச்சரும் தி.மு.க. பொருளாளருமான மு.க.ஸ்டாலின் 60 ஆவது பிறநதநாளை நேற்று கொண்டாடினார்.

தேனாம்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில் பிறந்த நாள் கேக் வெட்டினார். இதையடுத்து அவர் கோபாலபுரம் சென்று தி.மு.க. தலைவர் கருணாநிதி, தயாளு அம்மாள் ஆகியோரின் காலில் விழுந்து ஆசிபெற்றார்.

அவருக்கு கருணாநிதி முத்தம் கொடுத்து வாழ்த்துக் கூறினார். பின்னர் அவருக்கு சகோதரி செல்வியும் வாழ்த்துத் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து சென்னை ராயப்பேட்டையில் உள்ள வை.எம்.சி.ஏ. மைதானத்தில் தொண்டர்களைச் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றார்.

காலை 8.15 மணிக்கு தென்சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில் ஏற்பாடு செய்திருந்த கேக்கை மு.க. ஸ்டாலின் வெட்டினார்.

# தாக்குதல் முறியடிப்பு 2 தீவிரவாதிகள் கைது

(சென்னை)

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் மேற்கொள்ளப்படவிருந்த பயங்கரவாதத் தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தலைநகரின் முக்கிய இடங்கள் மற்றும் பிரமுகர்களை இலககு வைத்து தாக்குதல் நடத்தத் திட்டமிட்ட இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்துளளதாக பொலிஸார் கூறினர்.

மத்திய புலனாய்வு நிறுவனங்களிடம் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் லஷ்கர் ஈ தொய்பா இயக்கத்தைச் சேர்ந்த இந்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை கைது செய்வதற்கு ஜம்மு காஷ்மீர் மற்றும் ஜார்காண்ட் பொலிஸார் பாரிய ஒத்துழைப்பு வழங்கியுள்ளதுடன், கைது செய்யப்பட்டவர்களின் விபரங்களை பொலிஸார் வெளியிடவில்லை.

# திடீரென வற்றிய பிரம்ம புத்திரா சீனாவின் சதியென குற்றச்சாட்டு

(இடாநகர்)

ஆசியாவின் முக்கிய ஜீவ நதியான பிரம்மபுத்ரா நதி, திடீரென்று வரண்ட சம்பவம் அருணாச்சலப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிகழ்வை, அருணாச்சல் பிரதேச மாநில முதல்வரின் அரசியல் ஆலோசகரும், மாநில அரசின் செய்தித் தொடர்பாளருமான டாக்கோ தாபி உறுதி செய்துள்ளார். இது, சீனாவின் சதி வேலையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

திபெத்தின் தென்மேற்குப் பகுதியில் யார்லங் ஷாங்போ எனற பெயரில் உருவாகி, ஹிமாலய மலைத்தொடர் வழியாக உட்புகுந்து, இந்தியாவின் அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் உட்புகுகையில், திஹாங் என்று பெயர் மாற்றம் பெற்று, தென்மேற்கு பகுதியாகப் பாய்ந்து அசாமில் புகுந்தவுடன் பிரம்மபுத்ரா என்று பெயர் பெற்று வங்கதேசத்தில் நுழைந்தவுடன் ஜமுனா என்று பெயர் பெறுகிறது (இந்தியாவின் யமுனை நதி அல்ல). கங்கை நதியின் டெல்டா பகுதிகளில் பாய்ந்து, அங்கு பத்மா நதியுடன் இணைகிறது. பின் மேக்னா என்று பெயர் பெற்று இறுதியில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

பிரம்மபுத்ரா நதி வரும் பாதைகளில், சீனாஏற்படுத்தியுள்ள செயற்கைத் தடுப்புகளினாலேயே, நதி வரண்ட சம்பவம் நடைபெற்றுள்ளதாக டாக்கோ தாபி கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

2000 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் திகதி, பிரம்மபுத்ரா நதியின் நீர்மட்டம் திடீரென்று 30 அடி அளவிற்கு அதிகரித்தது. இதன்காரணமாக, அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் பெரும்பகுதி தண்ணீரில் சிக்கி தத்தளித்தது. திபெத்தில் இயங்கி வரும் நீர்மின் நிலையம் பலத்த சேதத்தைச் சந்தித்தது. இதில் சிக்கி பல பேர் பலியானதாக அவர் கூறினார்.

# மருத்துவப் பரிசோதனைக்காக சோனியா வெளிநாட்டிற்கு



(புதுடில்லி)


அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் சோனியாகாந்தி மருத்துவ பரிசோதனைக்காக வெளிநாடு சென்றுள்ளார்.

ஆறுமாதங்களுக்கு முன் அமெரிக்காவில் அறுவை சிகிச்சை மேற்கொண்டு குணமாகி இந்தியா திரும்பினார்.

சோனியா தற்போது மீண்டும் மருத்துவ பரிசோதனைக்காக வெளிநாட்டிற்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

64 வயதான சோனியா காந்தியின் உடல் நலக்குறைவு குறித்து ஊடகங்கள் பல கேள்வி எழுப்பினாலும், இது சாதாரண மருத்துவப் பரிசோதனைதான் என்றும் இன்னும் 5 நாட்களில் இந்தியா திரும்புவார் என்றும் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஜனார்தன் திவி வேதி தெரிவித்துள்ளார்.

# பாலகுமாரன் மருத்துவமனையில்




(சென்னை)

பிரபல எழுத்தாளர் பாலகுமாரன் கடந்த சில தினங்களுக்கு முன்பாக மூச்சுத் திணறலால் அவதிப்பட்டார். அதற்காக மயிலாப்பூரிலுள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், மூச்சுத்திணறல் அதிகமாகவே தற்போது அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

இருதய நோயாளியான பாலகுமாரனுக்கு ஏற்கனவே இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. நுரையீரலில் ஏற்பட்டுள்ள தொற்றின் காரணமாகவே தற்போது மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# கூடங்குளத்திற்கு பாதுகாப்பு தேவை என்கிறார் விஞ்ஞானி



(திருமலை)

கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு பாதுகாப்பளிக்க வேண்டுமென மத்திய அணுசக்தித்துறை விஞ்ஞானி ஆர்.சிதம்பரம் தெரிவித் துள்ளார்.

மத்திய அணுசக்தித்துறை விஞ்ஞானியான இவர் நேற்று முன்தினம் திருப்பதிக்கு வந்து டிஜிடல் நூலகத்தை தொடங்கி வைத்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

கூடங்குளம் அணுமின் நிலைய உற்பத்தி தொடங்கினால் நாட்டுக்கு நல்லது இங்கு 900 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகும். இதன்மூலம் மின்சாரப் பற்றாக்குறையைச் சமாளிக்க முடியும்.

இந்த அணுமின் நிலையத்துக்குத் தேவையான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

# தவக்காலச் சிந்தனை



## நாம் ஏன் செபம் செய்யவேண்டும்?

ஆண்டவரின் திருமுகத்தை நாடி அவரை மேலும் அறிந்துகொள்வதற்காக நாம் இறைவேண்டல் செய்கின்றோம். இயேசு ஒருவரே கருணை உருவானவர். எங்களின் பிரச்சினைகள் எல்லாவற்றையும் நன்கு அறிந்தவர். எம்மை உலகுக்கு கொண்டு வந்த அவர், எமது வாழ்வியல் செயற்பாடுகளை அறிந்திருக்க மாட்டாரா? நாளும் பொழுதும் எம்மைக் கவனித்துக் கொண்டிருப்பவர் அவர். ஆகவேதான் இந்த மனமாற்றத்தின் காலத்தில் எங்களைப் புதுப்பித்து, பாவக் கட்டுக்களில் இருந்து விடுபட இக்காலம் எம்மை அழைத்து நிற்கின்றது,

இறைவனோடு பேசுவதற்கும், உங்கள் இதயச் சுமைகளை இறக்கிவைத்து, பாவச் சூழ்நிலை ஏற்படும் நேரங்களில் அதனை எதிர்த்து அதில் விழாதபடிக்கு விசேட விதமாக வேண்டுவோம். இறைவனின் குரலை ஒவ்வொரு வினாடியிலும், இயற்கையின் உறைவிடங்களில் இருந்தும் கேட்டு ஆனந்தப்படுவோம். இதன் மூலம் இறை சந்நிதானத்தை நெருங்கி வந்து ஆண்டவர் பால் எங்கள் மனம் ஒன்றிக்க இறையருள் வேண்டுவோம். இவ்வளவு காலமும் எம்மைச் சூழ்ந்த பாவ இருளில் இருந்து விடுபட்டவர்களாக, புதுவாழ்வு மலர இறைவனின் பாடுகளில் ஒன்றித்து அவரோடு சேர்ந்து இரத்தம் தோய்ந்த இயேசுவின் திருமுக ஒளியில் பயணிப்போம்...

அருட்தந்தை மா.ரேஜிஸ் இராசநாயகம்

# அமெரிக்காவுக்கு அறிவிக்காமல் ஈரான் மீது தாக்குதல் நடத்தப்படும்

## எச்சரிக்கிறது இஸ்ரேல்



(டெல்அவிவ்)

ஈரானிய அணுநிலைகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தத் தீர்மானித்தால் அதுகுறித்து அமெரிக்காவுக்கு இஸ்ரேல் முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கமாட்டாது என இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க, இஸ்ரேலிய உயர் மட்ட கலந்துரையாடலின்போது இஸ்ரேலிய அதிகாரிகள் இதைத் தெரிவித்தாக அமெரிக்க புலனாய்வு அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

இஸ்ரேலின் தாக்குதலை அமெரிக்கா தடுக்கத் தவறிவிட்டதென பொறுப்புக்கூறப்படுவதை தணிப்பதற்காக அமெரிக்காவுக்காவுக்கு இத்தாக்குதல் குறித்து முன்கூட்டியே அறிவிக்கப்பட மாட்டாது என இஸ்ரேலிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதால் ஈரானிய அணுசக்தி திட்டங்களுக்கு தற்காலிக பின்னடைவு மாத்திரமே ஏற்படும் என இஸ்ரேலை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு அமெரிக்கா பல மாதங்களாக முயற்சித்து வருகிறது.

அமெரிக்காவின் கூட்டுப் படையதிகாரிகளின் பிரதானிகளின் தலைவர், வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர், தேசிய புலனாய்வு பணிப்பாளர், அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்காவின் உயர் அதிகாரிகளிடம் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாஹூவும் பாதுகாப்பு அமைச்சர் எஹூட் பராக்கும் இந்தத் தகவலை தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாஹூ அடுத்தவாரம் வொஷிங்டனுக்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# ஈரானிடம் கொள்வனவு செய்யும் எண்ணெய் அளவைக் குறைக்குக

## இந்தியாவைக் கோருகிறது அமெரிக்கா

(வொஷிங்டன்)

இந்தியா, சீனா மற்றும் துருக்கி நாடுகள், ஈரானிடம் இருந்து இறக்குமதி செய்யும் எண்ணெயின் அளவைக் குறைத்துக் கொள்ளும்படி மிகவும் அழுத்தமாக வெளிப்படையாக அமெரிக்கா கோரியுள்ளதாக, அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.



ஈரானின் அணுசக்தி திட்டங்கள் குறித்து சந்தேகம் கொண்டுள்ள அமெரிக்கா, உலக அரங்கில் அந்நாட்டைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளது. ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளிடம் பேசி, இறக்குமதியைக் குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதுகுறித்து நேற்று முன்தினம் காங்கிரஸ் சபையில் அமைச்சர் ஹிலாரி கிளின்டன் பேசுகையில் இந்தியா, சீனா மற்றும் துருக்கி நாடுகள், ஈரானிடம் இருந்து இறக்குமதி செய்யும் எண்ணெய் அளவைக் குறைக்க வேண்டும் என அமெரிக்கா அழுத்தமாக வெளிப்படையாகத் தெரிவித்துள்ளது.

அந்நாடுகள் அமெரிக்கா சொல்லுப்படி செய்ய வேண்டுமெனில், அதற்காக நாம் மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.எனினும், சில நாடுகள் ஈரானை விட்டு விலகுவது என்பது கடினம் தான். அதனால், அந்நாடுகளுக்கு ஏற்படும் இழப்புகளை வேறு வழிகளில் சரிக்கட்ட நாம் உதவ வேண்டும்.இவ்வாறு ஹிலாரி தெரிவித்தார்.

# சிரியாவின் வன்முறைகளில் 7500இற்கு மேற்பட்டோர் பலி

## ஐ.நா.சபை தகவல்

(ஜெனிவா)

சிரியாவில் தொடரும் வன்முறைகளினால் இதுவரை 7,500 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

சிரியாவின் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் ஆராயப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் மனித உரிமைப் பேரவையின் பிரதிநிதிகளுடன் எழுந்த கருத்து முரண்பாடுகளை அடுத்து, சிரியா அமர்வுகளிலிருந்து வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிரிய ஜனாதிபதி பஷார் அல் அஷ்ஷார்ட் பதவி விலக வேண்டும் எனத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹியுகோ சாவேஸின் உடல் நிலையில் திருப்தி



வெனிசுவேலாவின் ஜனாதிபதி ஹியுகோ சாவேஸின் உடல்நிலை திருப்தியளிக்கும் வகையில் உள்ளதாக வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஜனாதிபதி ஹியுகோ சாவேஸிக்கு புற்றுநோய தொடர்பான சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.ஹியுபாவில் வைத்து இதற்கான சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு முன்னரும் ஜனாதிபதி ஹியுகோ சாவேஸிக்கு புற்றுநோய் தொடர்பான சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஹியுகோ சாவேஸ் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது

# சீனாவில் வன்முறை; 12 பேர் உயிரிழப்பு

(பீஜிங்)

சீனாவின் வடமேற்கு பிராந்தியத்திலுள்ள கஸ்கார் நகரில் இடம்பெற்ற வன்முறைகளில் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஸிங்ஜியாங் மாகாணத்தில் ஏற்பட்ட வன்முறைகளின் போது 10 பேர் கொல்லப்பட்டதுடன், மேலும் இருவர் பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

வன்முறைகள் உருவாகியமைக்கான காரணங்கள் எதனையும் அந்த நாட்டு அரச தொலைக்காட்சி வெளியிடவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு குறித்த பகுதியிலுள்ள இனப்பிரிவினருக்கு இடையில் ஏற்பட்ட வன்முறைகளை அடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை குறித்த வன்முறைகளில் 200 பேர் வரை கொல்லப்பட்டதாக அரசாங்கதரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பதிவிறக்கப் பெட்டகம்

ஸ்பெயினைச் சேர்ந்த மரியா ரோசாரியோ குவேரா என்பவர், தாங்களிருவரும் உறவினர்களா என்று கேட்டு சே குவேராவின் பூர்வீகம் குறித்து வினவி எழுதியபோது, சே எழுதிய பதில்: "தோழரே, உண்மையில் ஸ்பெயினின் எப்பகுதியிலிருந்து எனது மூதாதையர்கள் வந்தனர் என்பதை நான் அறியேன். நீண்ட காலத்திற்கு முன்னரே அவர்கள் தங்களது பூர்வீக இடத்தைவிட்டு உடுத்த உடையோடு ஆர்ஜென்டைனா வந்துவிட்டனர். நாம் நெருங்கிய உறவினர் அல்லர் என்றே நான் நினைக்கிறேன். ஆனால் இந்த உலகத்தில் அநீதி தலையெடுக்கிற போதெல்லாம் கோபமும் வெறுப்பும் கொண்டு நீ குமுறி நடுங்குவாயானால் நாம் இருவரும் தோழர்கள். அதுதான் முக்கியமான விஷயம்."

"சே" என்ற சொல்லை ஆர்ஜென்டைனர்கள் குவேரனி இந்தியர்களிடமிருந்து பெற்றார்கள் என்று மொழியியலாளர்கள் கூறுவர். ஆனால் தென்னமெரிக்கப் பம்பாஸ் புல்வெளி வாழ்வோருக்கு, அந்தச் 'சே' எனும் சொல் – பயன்படுத்தப் படும் இடத்தாலும், உச்சரிக்கப்படும் முறையாலும் – ஆச்சரியம், ஆனந்தம், வருத்தம், நாணயம், அங்கீகாரம் அல்லது ஆட்சேபம போன்ற மானுட உணர்வுகளின் ஒட்டுமொத்த பலவண்ணச் சித்திரத்தை வெளிப்படுத்தும் ஒரு சொல்லாகும்.

இந்த வியப்புக் குறியீட்டுச் சொல்லின் மேல் கொண்ட காதலின் காரணமாகத்தான், கியூபாப் புரட்சியாளர்கள் டான் எர்னஸ்டோவின் மகனாகிய எர்னஸ்டோ குவேராவைச் 'சே' என்று செல்லப் பெயர் சூட்டியழைத்தனர். இந்தச் செல்லப்பெயர் காலத்தை வென்று அவரது புனைபெயராயிற்று; அவரது பெயரோடு பிரிக்க முடியாத வண்ணம் இறுக்கமாக இணைந்து கொண்டு விட்டது. கியூபாவிலும் உலகமெங்கிலும் அவர் எர்னஸ்டோ சே குவேரா என்றே அறியப்படுகிறார். – ஜ. லாவ்ரெட்ஸ்கி

பணம் இல்லாத காரணத்தால் நோயுற்ற குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் மருத்துவம் அளிக்க முடியாமல் போகிற அவலத்தை நான் கண்டேன். குழந்தை இறப்பதைத் தடுப்பதற்கு வழியின்றி ஒரு தந்தை, பிள்ளையின் மரணத்தைச் சகித்திருக்கும் அளவுக்குத் தொடர்ச்சியான பட்டினியாலும், துன்பங்களாலும் மனிதன் மிருகநிலைக்கு இழிந்திருப்பதை நான் கண்டேன்... இவ்வாறாக ஒரு பிரபல ஆராய்ச்சியாளராக ஆவதைக் காட்டிலும் அல்லது மருத்துவ விஞ்ஞானத்திற்குப் பெருந்தொண்டாற்றுவதைக் காட்டிலும் முக்கியமான, மக்களுக்கு உதவக்கூடிய கடமை ஒன்று இருக்கிறது என்பதை நான் கண்டு கொண்டேன். – சே குவேரா

வாசிப்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அத்தியாவசியமானது என்பதை அவர் வாழ்ந்த காலம் முழுவதும் வலியுறுத்தி வந்தார். வாசிப்புதான் மனிதனுக்கு அடிப்படைக் கலாசாரத்தைக் கொடுக்கிறது. மற்ற நாடுகளையும் அவற்றின் மக்களையும் புரிந்துகொள்ளவும், தெரிந்துகொள்ளவும் உதவுகிறது என்பார். கெரில்லாவாக செயற்பட்ட காலங்களில் இவர் தோளில் சுமக்கும் பை, புத்தகங்களின் காரணமாக மற்ற தோழர்களுடையதை விட அதிக கனமுள்ளதாகவே இருந்திருக்கிறது. – கிரானெடா

என் வீடு என்பது என் இரு கால்களே. என் கனவுகளுக்கு எல்லையோ முடிவோ இல்லை. – சே குவேரா

அவரிடம் ஏகப்பட்ட புத்தகங்கள் இருந்தன. படிப்பதற்காகவோ அல்லது டைரியில் குறிப்பு எழுதுவதற்காகவோ அவர் அடிக்கடி தூக்கத்தைத் தியாகம் செய்வார். அதிகாலையில் எழுந்துவிடுவாரானால் உடனே படிக்கத் தொடங்கி விடுவார். அந்த நாள் படிப்போடு தொடங்கும். அடிக்கடி முகாம் விளக் கின்வெளிச்சத்தில் அவர் இரவுகளில் நெடுநேரம் படித்துக் கொண்டிருப்பார். – சே அணியில் போராடிய மார்ஸல் ஒரோஸ்கா

சே குவேராவின் அவலம் பொலிவியாவில் அவர் படுகொலை செய்யப்பட்டது மட்டுமல்ல; அவர் பங்கேற்ற புரட்சிகள் எதிலும் பாட்டாளி வர்க்கத்திற்கு முதன்மைப் பாத்திரம் இருக்கவில்லை என்பதும், பரந்துபட்ட வெகுமக்களின் பங்கேற்புக்கு அல்லாமல் அர்ப்பணிப்பு உணர்வும் திடசங்கற்பமும் கொண்ட கெரில்லாப் போராளிகளுக்கே முதன்மை வழங்கப்பட்டது என்பதும், அவற்றின் பாரதூரமான விளைவுகள் 'சோசலிச' கியூபாவில் மட்டுமின்றி பல்வேறு நாட்டுப் புரட்சி இயக்கங்களிலும் உணரப்பட்டன என்பதுமாகும். எனினும் தனது நடைமுறைத்தந்திர உத்திகளில் இருந்த தவறுகளுக்காகவும் சேர்த்துத் தன் உயிரையே விலையாகக் கொடுத்துச் சென்றிருக்கிறார் என்பதால்தான் ழான் பவுல் சார்த்தர் அவரை 'மிக மிக முக்கியமான மனிதன்' என்று வர்ணித்தார் போலும். – எஸ்.வி.ராஜதுரை

சே குவேராவைப்போன்ற மனிதர்கள், உலகுக்கு எதையும்விட்டுச் செல்லாமல் இறப்பதில்லை. – இவோனோவிச் மிகோயன்

## முல்லை உள்ளூராட்சி மன்றத்தேர்தல்

# வாக்காளர் அடையாளம் உறுதிப்படுத்துவது அவசியம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது வாக்காளர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயம் என தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுரைப்பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய விடுத்துள்ள விசேட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் வாக்காளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கக் கூடிய செல்லுபடியான ஆவணங்களை தேர்தல்கள் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லும்போது தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம், ஓய்வூதிய அட்டை, முதியோர் அட்டை, மதகுருமார்களுக்காக ஆட்பதிவுத்திணைக்களம் விநியோகித்துள்ள அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை வாக்காளர் எடுத்துச்செல்ல வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிததுள்ளார்.

இதனைத் தவிர தேர்தல்கள் திணைக்களம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் கடந்த தேர்தல்களுக்காக விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகளையும் வாக்காளர்கள் பயன்படுத்த முடியும்.

குறித்த அடையாள அட்டைகளில் எந்தவொரு அடையாள அட்டைகளும் இல்லாதவர்கள் உடனடியாக கிராம உத்தியோகத்தரைச் சந்தித்து தற்காலிக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தலில் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களுக்கு இம்மாதம் 10ஆம் திகதி வரை மாத்திரமே தேர்தலுக்கான தற்காலிக அடையாள அட்டை விநியோகிக்கப்படும் என தேரதல்கள் ஆணையாளர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மல்லாவி - மங்கை நகரில் திருடர்கள் அட்டகாசம்

(கிளிநொச்சி)

மல்லாவி வடக்கு மங்கை நகர்ப் பகுதியில் திருடர்களின் நடமாட்டத்தால் மீளக்குடியமர்ந்த மக்கள் அச்சத்தில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் வாழும் மக்களில் 15இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அரை ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்டுள்ளபோதிலும் 6 குடும்பங்களே நிரந்தரமாக வசிக்கின்றன.

ஏனையோர் வெவ்வேறு இடங்களில் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் இந்தப் பகுதியில் இரவானதும் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மேலும் இந்தப் பகுதி பற்றைக்காடுகளால் சூழப்பட்டு மிகவும் பயங்கரமான சூழலாகக் காணப்படுகிறது. இதனாலேயே பலர் இங்கு குடியமர விரும்பாத நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (143)

## தனியார் துறை ஆசிரியர்களுக்கும் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இரண்டு வருட பயிற்சியை வழங்க கோப்பாய் ஆசிரிய கலாசாலை முன்வந்துள்ளது. இது தொடர்பான தகவலை இலங்கைத்தமிழர் ஆசிரிய சங்கம் வெளியிட்டுள்ளது.

ஆசிரிய உதவியாளர்களாக உள்ளவர்களை நிறுவன ரீதியிலான இரண்டுவருட பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை மார்ச் மாதம் 22,23,24ஆம் திகதிகளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது. இதற்கான நேர்முகத் தேர்வுக் கடிதங்கள் உரியவர்களுக்கு விரைவில் ஆசிரிய கல்வி நிர்வாகப் பிரிவால் அனுப்பி வைக்கப்படும் என . மத்திய கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இக் கடிதம் கிடைக்கப்பெறாதவர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா.கணபதிபிள்ளையுடன் தொடர்புகொள்ளுமாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும் தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களும் இக் காலப்பகுதியில் பயிற்சிக்காக உள்வாங்கப்படவுள்ளதால் அவர்களும் அதிபருடன் தொடர்புகொள்ளுமாறு அவர் கேட்டுளளார். விண்ணப்பங்களை விரைவாக அனுப்பி வைக்குமாறும், மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள பொதுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (137)

## தண்டவாளங்களை திருடியவர்களுக்கு தண்டம்

(சாவகச்சேரி)

புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான இரும்புத்தண்டவாளங்களை களவாடியதாக 7 சந்தேக நபர்களை கொடிகாமம் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைத்த பின், பிணையில் விடப்பட்ட சந்தேக நபர்களுக்கான குற்றப்பத்திரம் நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது 7 சந்தேக நபர்களும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.முதல் 5 சந்தேக நபர்களுக்கும் தலா 1500 ரூபா வீதம் தண்டம் விதித்து தலா 100 ரூபாவை அரச செலவாக செலுத்துமாறும், 6ஆம் 7ஆம் சந்தேக நபர்களை எதிர்வரும் 14ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறும் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார். (11)

# அடிப்படை வசதிகளைக் கோரி நிற்கும் முல்லை கருநாட்டுக்கேணி கிராம மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு- கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கருநாட்டுக்கேணி கிராம மக்கள் அடிப்படைவசதிகள் எதுவுமற்ற நிலையில் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருவதாக அக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் உள்ள மக்கள் கடந்த யுத்த அனர்தங்கள் மற்றும் அசாதாரண சூழ்நிலையினால் இடம் பெயர்ந்து 28 வருடங்களின் பின்னர் மீள்குடியேறி வாழ்வாதார ரீதியாக தாம் பெரும் இன்னல்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இக் கிராமத்தில் 197 குடும்பங்களைச் சேர்ந்த 517 பேர் மீள்குடியேறி வாழ்ந்து வருகின்றன.

இம்மக்கள் மீள்குடியேறி ஒன்றரை வருடங்கள் கழிந்துள்ள நிலையில், 70 பேருக்கு கரித்தாஸ் நிறுவனத்தினால் நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு பூர்த்தியடையும் நிலையில் உள்ளது. 93 பேருக்கு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மிகுதிப் பேர் நிரந்தர மற்றும் தற்காலிக வீட்டு வசதிகள் எதுவுமின்றி தறப்பாள்களின் கீழும் குடிசைகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இதேவேளை வீதிகள் மணல் வீதிகளாக போக்குவரத்திற்கு ஏற்புடையதற்றதாகக் காணப்படுகின்றது. மின்சார வசதிகள், குடிநீர் வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் இல்லை. கடற்தொழிலை நம்பி வாழும் மீனவர்களுக்கு கடற்தொழில் உபகரணங்கள், விவசாயிகளுக்கான உள்ளீடுகள் என்பனவும் வழங்கப்படவில்லை என இக் கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இக் கிராமத்தில் உள்ள பாடசாலையும் இதுவரை இயங்காத நிலையில் இங்குள்ள 110 பிள்ளைகள் கொக்கிளாய் பாடசாலைக்கும், முல்லைத்தீவு பாடசாலைக்கும் பெரும் கஷ்டத்தின் மத்தியில் சென்று வருகின்றனர். அரச பேருந்து சேவைகள் இக்கிராமத்திற்கு இல்லை. தனியார் பேருந்துகள் சிலவே இடம்பெறுகின்றன. அச் சேவையும் ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெறுவதில்லை எனக் தெரிவிக்கின்றனர்.

பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. இதனால் தாம் பொருளாதார ரீதியாகவும் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில். வாழ்ந்து வரும் தமது தேவைகள் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டால், தாம் சிரமமின்றி வாழக்கூடிய சூழ்நிலை ஏற்படும் எனவும் இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் ஆவண செய்யுமாறு இக்கிராம மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (04)

# ராசி பலன் மார்ச் 1-15 வரை..

**கணிப்பவர் பெருங்குளம் ராமகிருஷ்ணன்MCA,MA(Ast)**

### மேஷம் :

அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம். உழைப்பால் உயரும் மேஷ ராசி வாசகர்களே ராசியில் சுக்கிரன், குரு, இரண்டில் கேது, ஐந்தில் செவ்வாய், ஏழில் ராகு, எட்டில் ராகு, பதினொன்றில் சூரியன், பன்னிரெண்டில் புதனுமாக கிரக நாயகர்களின் சுழற்சி அமைந்துள்ளது. மார்ச் 12 ஆம் திகதி 11ஆம் இடத்திற்கு வக்ரகதியில் புதனும், 14ஆம் திகதி விரையஸ்தானத்திற்கு சூரியனும் பெயர்ச்சியாகிறார்கள்.

உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். உற்சாகத்துடன் அனைத்து காரியங்களிலும் ஈடுபடுவீர்கள். ஐந்தில் அமைந்துள்ள செவ்வாயால் சுகங்களும், சந்தோஷங்களும் பெருகும். நிலம், வீடு போன்றவற்றில் உள்ள பிரச்சினைகள் முடிவுக்கு வரும். தந்தையின் ஆதரவும் உண்டு. இரண்டு, ஏழுக்குரிய சுக்கிரன் ஒன்றில் அமைந்துள்ளதால் வழக்கில் வெற்றி அல்லது நீண்ட நாட்களாக இழுபறியில் உள்ள பிரச்சினை முடிவில் செல்வம், உரிமை, அதிகாரம் கிடைக்கப் பெறுவீர்கள். சுய ஜாதகத்தில் திசாபுக்திகள் அனுகூலமற்று இருப்பின் தவறான வழிமுறைகளில் செல்வம் கரையவும் வாய்ப்புண்டு. எச்சரிக்கையாக இருக்கவும்.

மூன்றாம் வீட்டுக்குரியவர் பன்னிரெண்டில் உலவுவதால் இளைய சகோதரர் சகோதரி வேலை நிமித்தம் வெளியூர் செல்ல வேண்டி வரலாம். அண்டை அயலாருடன் இருக்கும் மனக்கசப்புகள் நீங்கி உற்சாகம் பிறக்கும். பிள்ளைகளிடம் அன்பு, பாசம் காட்டுவது நல்லது.

கலைத்துறையினருக்கு மிகச் சிறந்த காலகட்டமிது. வாய்ப்புகள் தேடி வரும். மாணவர்கள் கல்வியில் சிறப்பான தேர்ச்சியினைக் காண்பார்கள்.

சந்திராஷ்டம நாட்கள்: மார்ச் 14, 15

பரிகாரம்: செவ்வாய்க்கிழமை தோறும் அம்பாளுக்கு இளநீர், பன்னீர் அபிஷேகங்கள் செய்யலாம். ஏதேனும் ஒரு அம்பாள் கோவிலுக்கு நல்லெண்ணை சமர்ப்பிக்கவும்.

### ரிஷபம்:

கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 ஆம் பாதம்

அனைவரையும் தனது நேர்மையால் கவர்ந்து இழுக்கும் ரிஷப ராசி வாசகர்களே ராசியில் கேது, நான்கில் செவ்வாய், ஆறில் சனி, ஏழில் ராகு, பத்தாமிடத்தில் சூரியன், பதினொன்றில் புதன், பன்னிரெண்டில் வியாழன், சந்திரன், ராசிநாதன் சுக்கிரனுமாக நவநாயகர்கள் வலம் வருகிறார்கள். மார்ச் 12ஆம் தியதி புதன் வக்ரமாகி பத்தாம் இடத்திற்கும், மார்ச் 14ஆம் திகதி பதினொன்றாம் ஸ்தானமாகிய லாபஸ்தானத்திற்கு சூரியனும் பெயர்ச்சியாகிறார்கள்.

ராசியில் கேது இருப்பினும் சுகஸ்தானம் வலிமை பெற்றிருப்பதால் சுகம் பெருகும். மகிழ்ச்சி கூடும். பொருள் வரவு அதிகரிக்கும். பழைய பாக்கிகள் எளிதில் வசூலாகும். புகழ் தேடி வரும். ஒரு பெரிய அரசியல் கட்சி அல்லது அரசாங்கத்தின் அனுகூலம் கிடைக்கப் பெறுவீர்கள்.

குல தெய்வ ஆராதனைகளிலும், புனிதப் பயணங்களிலும் ஈடுபடுவீர்கள். தாய் வழி உறவினர்களால் நன்மை ஏற்படும். ஆடை ஆபரணங்கள் சேரும் காலமிது. உடன்பிறப்புகளால் நன்மை கிட்டும். விளையாட்டுதுறையில் உள்ளவர்களுக்கு பரிசும், பாராட்டுதல்களும் கிடைக்கும். பயணங்களால் மகிழ்ச்சியும், ஆதாயமும் கிடைக்கும்.

நான்காமிடத்தை குரு பார்ப்பதாலும், நான்காம் வீட்டிற்குடையோன் நான்காம் வீட்டைப் பார்ப்பதாலும் நிலம், வீடு, வாகனம் வாங்கும் வாய்ப்புகள் கை கூடி வரும். குழந்தைகளின் கல்வி, நடத்தை ஆகியன நன்றாக இருக்கும். நீதிமன்ற வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். வேதாந்த விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும்.

கலைத்துறையில் உள்ளவர்களுக்கு பாராட்டுகள் வரும். வெளிநாட்டு பயணங்களும் இனிதே அமையும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி பெறுவர்.

சந்திர்ஷ்டம நாட்கள்: இல்லை

பரிகாரம்: ஸ்ரீ சுதர்சனரை வழிபடுவது.

### மிதுனம்:

(மிருகசீரிஷம் 3, 4 ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதம்) - எதிலும் நிதானத்தை கடைப்பிடிக்கும் மிதுன ராசி வாசகர்களே மூன்றில் செவ்வாய், ஐந்தாமிடத்தில் சனி, ஆறாம் இடத்தில் ராகு, ஒன்பதாமிடத்தில் சூரியன், பத்தாமிடத்தில் ராசிநாதன் புதன், பதினொன்றில் சுக்கிரன், வியாழன், சந்திரன், பன்னிரெண்டில் கேதுவுமாக கிரக நாயகர்கள் வீற்றிருக்கின்றனர். 12ஆம் தியதி ராசிநாதன் புதன் கும்பத்திற்கும், 14ஆம் தியதி சூரியன் மீனத்திற்கும் பெயர்ச்சி ஆகின்றனர்.

மூன்றில் செவ்வாய் உலவுவது சிறப்பில்லாமல் இருந்தாலும் சுகம், பாக்கியம், தொழில், இலாபம் ஆகியவை நன்றாக உள்ளன. லாபஸ்தானத்தில் குரு சந்திரயோகம் உண்டாவதால் பொருள் வரவில் குறைவு ஏற்பட வாய்ப்பு இல்லை. எனினும் குடும்பத்தில் சிறு சிறு பிணக்குகள் வந்து மறையும். கோபம் கலந்த வார்த்தைகளை உதிர்க்காமல் இருப்பது நன்று.

ஆறாமிடத்து அதிபதியாகிய செவ்வாய் மூன்றில் அமர்ந்து ஆறைப் பார்ப்பதாலும், ஆறாமிடத்தில் ராகு இருப்பதாலும் நெஞ்சு சம்பந்தப்பட்ட சிறு சிறு உபாதைகள் தோன்றலாம். எனினும் கவனம் தேவை. ராசிநாதன் பத்தில் உலவுவதால் உறுதியும், துணிவும் நிறைந்திருக்கும். பிரபலங்களின் நட்பும், ஆதரவும் கிடைக்கும். இசையில் உள்ள திறமையை காட்டுவதற்கு மிக சரியான காலகட்டமிது. உங்கள் திறமை பளிச்சிடும். ஆன்மீக, மத நம்பிக்கைகள் அதிகரிக்கும். பேச்சுதிறமையால் வழக்குகளில் வெற்றிகள் காண்பீர்கள். தாயாரின் உடல்நலம் சீராகும். வியாபாரத்தில் நல்ல லாபம் பெறலாம்.


கலைத் துறையினர் பெரும் பொருள் ஈட்டுவர். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பர்.

சந்திராஷ்டம தினங்கள்: இல்லை

பரிகாரம்: ஸ்ரீ மகாவிஷ்ணுவையும், கணபதியையும் வழிபடுங்கள். பசுவுக்கு ஆகாரம் கொடுங்கள்.

(தொடர்ச்சி நாளைய தினமுரசில்)

# வடக்கில் சுகாதாரத் தொண்டர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்





யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 150 சுகாதாரத் தொண்டர்களுக்கான பணி நியமனங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதில் சேவைக்காலம் மற்றும் வயதெல்லையின் அடிப்படையில் பணி நியமனங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

மருதங்கேணி, பருத்தித்துறை வல்வெட்டித்துறை, பிரதேசங்களைச் சேர்ந்த சுகாதார தொண்டர்களுடனான கலந்துரையாடல் நேற்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மந்திகைப் பிரதேச அலுவலகத்தில் வடமராட்சி அமைப்பாளர் சிறீரங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் கடந்த பல வருடங்களாக பல்வேறு மக்கள் நல அபிவிருத்தித் திட்டங்கள் வேலை வாய்ப்புக்கள் உள்ளிட்ட பல செயற்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகக் குறிப்பிட்டார்.

அங்கு கருத்துத் தெரிவித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சர்வதேச இணைப்பாளர் ம.மித்திரன் சுகாதார தொண்டர்களின் பணி நியமனக் கோரிக்கையை ஏற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அரசாங்கத்துடன் கலந்துரையாடி ஆரம்பக் கட்டமாக வடமாகாணத்தைச் சேர்ந்த150 இற்கும் மேற்பட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான பணி நியமனங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்தார். யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் பல வருடங்களாக நியமனம் வழங்கப்படாத நிலையிலும் தமது சேவையை ஆற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.நகரில் நேற்று அதிரடி சோதனை கொள்ளை இலாபமீட்டியோர் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாகப் பனடோல், மற்றும் குளிர்பானம் விற்பனை செய்த எட்டு வர்த்தகர்களுக்கு 40 ஆயிரம ரூபா அபராதம் யாழ். நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

யாழ். நகரின் பல்வேறு பகுதிகளில் பாவனையாளர் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது குறித்த வர்த்தகர்கள் குற்றஞ்சாட்டு யாழ். நீதவான் நீதிமன்றில நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கு இணங்க ஒவ்வொருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார்.(எஸ்)

# ஆயுதங்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இரணைப்பாலைக்கு அருகாமையில் இருந்து பெருமளவிலான வெடிபொருட்களை, வவுனியாவிலிருந்து சென்ற விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா தடுப்பு முகாமில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொடுத்த இரகசிய தகவலின் படி, வவுனியாவிலிருந்து புதுக்குடியிருப்பு இரணைப்பாலைக்குச சென்ற விசேட அதிரடிப் படையினரின் தேடுதலிலேயே விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப் பட்டிருந்த ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கிளைமோர் - 14, கிறனைட்- 6, விடுதலைப் புலிகள் தயாரித்த மிதிவெடி- 13, ஹெட்டனேட்டர் - 5, ஆர்.பி.ஜி குண்டு - 8, ரவைகள் - 750, பராலைட் - 81, ஆட்லெறி குண்டு 120mm - 10 ஆகிய வெடி பொருட்களே வவுனியா விசேட அதிரடிப்படையினரால் மீட்கப் பட்டவைகளாகும்.

# ஜனாதிபதிக்கு எதிரான வழக்கு நிராகரித்தது அமெரிக்க நீதிமன்றம்

(வொசிங்டன்)

யுத்தகாலத்தில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மேற்படி நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

வெளிநாடு ஒன்றின் தலைவர் என்ற வகையில் மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு சட்ட விலக்கு இருபதாக அந்த வழக்கை விசாரித்த நீதிபதி தெரிவித்திருக்கிறார்.

கோடிட்டுக் காட்டி ராஜபக்ஷவுக்கு எதிரான இந்த வழக்கை, திருகோணமலையில் ஆறு வருடங்களுக்கு முன்னர் கடற்கரையில் சுட்டுக்கொல்லப்பட்ட மாணவர்களின் உறவினர்களும், மூதூரில் கொல்லப்பட்ட பிரெஞ்ச் தொண்டு நிறுவனத்தின் பணியாளர்களின் உறவினர்களும் தாக்கல் செய்திருந்தார்கள்.

இந்த இரு கொலைச் சம்பவங்கள் தொடர்பாகவும் எவர் மீதும இதுவரை குற்றம் சுமத்தப்படவில்லை.

அமெரிக்காவின் அமெரிக்க ஒபாமா நிர்வாகம், ராஜபக்ஷ அவர்கள் பதவியில் இருக்கும் வரை அவருக்கு சட்ட விலக்கு இருப்பதாக கூறுவதால், இந்த வழக்கை தாம் தள்ளுபடி செய்வதாக அந்த வழக்கை விசாரித்த மாவட்ட நீதிபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சட்டங்களை மீறியதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மிகவும் அதிர்சசியை தருவனவாக இருப்பதால், இந்த நடவடிக்கைகளை தான் சாதாரணமானவையாக எடுத்துக்கொள்ள முடியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

தாம் மனித உரிமைகளை மீறியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் வன்மையாக மறுப்பதாக வொசிங்டனில் உள்ள இலங்கை தூதரகம் கூறியுள்ளது.

கடந்த மாதத்தில் இலங்கையின் ஒரு முன்னாள் மூத்த இராணுவ தளபதியான சவேந்திர சில்வாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ஒரு சிவில் வழக்கும், அவருக்கு சட்ட விலக்கு இருப்பதாகக் கூறி நிராகரிக்கப் பட்டது.

அவர் தற்போது ஐ.நா.வுக்கான இலங்கையின் துணைத்தூதுவராக இருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முடிவிற்கு வந்தது பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அனைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் மேற்கொண்டு வந்த காலவரையற்ற பகிஷ்கரிப்பு நேற்று முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பளவுயர்வு, ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால் பல்வேறு தடவை பகிஷ்கரிப்பினை மேற்கொண்டனர். இருப்பினும், நேற்று முன்தினம் முதல் காலவரையறையற்ற பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இவர்களின் இந்த காலவரையற்ற பகிஷ்கரிப்பினால், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, 975 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாகவும், மேலதிகமாகவும் 10 சதவீதம் சம்பளவுயர்வு வழங்க இணங்கியுள்ளது. இது தொடர்பான விடயத்தினை சுற்று நிருபம் எதிர்வரும் 03 ஆம் திகதி வெளியிடும் என யாழ்.பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் சங்கத்தின் தலைவர் சி.தங்கராஜா தெரிவித்தார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுதியளித்தது போன்று நடக்கத் தவறுமாயின் மீண்டும் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவோம் என யாழ்.பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் கூறியுள்ளனர்.

# போர்க்கால யாழ்ப்பாணம் தயாராகிறது திரைப்படம்

(கொழும்பு)

யுத்தகாலத்தில் யாழ்ப்பாணம எப்படி இருந்தது என்ற விடயத்தை கருப்பொருளாகக் கொண்ட திரைப்படம் ஒன்று தயாராகி வருகிறது.

மேற்படி போர்க்கால யாழ்ப்பாணத்தைக் களமாகக்கொண்ட ஓர் அரசியல் திகில் படத்தில பிரபல ஹிந்தி நடிகர் ஜோன ஆபிரஹாம் நடிக்கவுள்ளார். விக்கிடோனர் என்ற படத்தை இயக்கிய சூயித் செர்கர் இயக்கவுள்ள யாழ்ப்பாணம் படத்தில் நடிக்க ஜோன் ஆபிரஹாம் மிக ஆர்வததுடன் சம்மதித்துள்ளார். ஜோன் அரசியல் விழிப்புணர்வுள்ள நடிகர் ஆவார். அதிகாலையிலேயே பத்திரிகைகளை படித்துவிடும் அவர், உலக நடப்பு விவகாரங்களை நன்கு அறிந்தவராக உள்ளார். "யாழ்ப்பாணம்" என்ற படம் பற்றி கூறியதுமே அவர் அதில் நடிக்க சம்மதித்து விட்டார் என செர்கர் கூறினார்.

பிரிவினைவாதமும் தீவிரவாத வன்முறையும் எனக்கு புதிய கருப்பொருட்கள் அல்ல. எனது முதலாவது படமே காஷ்மீர் பிரிவினைவாதம் பற்றிய ஜஹான் என்பதாகும் என செர்கர் குறிப்பிட்டுள்ளார்.

மணிரத்தினம் தயாரித்த கன்னத்தில் முத்தமிட்டால் புலிகளின் பின்னணியில் அமைந்த காதல் ஆகும். ஆனால் எனது படம் ஓர் அரசியல் திகில் படம் ஆகும் என செர்கர் தெரிவித்துள்ளார். ஹிந்தி திரை யுலகில் முன்னணி நடிகர்களில் ஒருவரான ஜோன் ஆபிரஹாம் யாழ்ப்பாணம் திரைப்படத்தின் தயாரிப்பிலும் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிவில் நிர்வாகத்திற்கு...

சம்பந்தனும் சுமந்திரனும் அரசாங்கத்திற்கு விலைபோய்விட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டு வரும் நிலையில், அதற்குப் பாவமன்னிப்புத் தேடும் விதமாக அரசாங்கத்தைச் சாட்டி சம்பந்தன் அவர்களால் இக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மனித உரிமை உறுப்பு நாடுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தின் சாரம் வருமாறு...

இலங்கை அரசாங்கம் நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் குறைபாடுகளை நாம் சர்வதேச சமுதாயத்திற்கு எடுத்துக் கூறினோம். இருப்பினும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் சிபாரிசுகளின் நல்ல அம்சங்கள் சிலவற்றையும் இனம் காண்போம். அவை வடக்கு, கிழக்கு பகுதியிலிருந்து இராணுத்தை விரைந்து அகற்றுவது, மனித உரிமை மீறல்களை விசாரித்தல், அதிகாரத்தை பகிர்வதற்கான நாடாளுமன்ற சட்டங்களை இயற்றுதல் என்பனவே அவை. ஆயினும் இலங்கை அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் தடுத்துவைக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடுமாறு கூறியது. துணைப்படைகளின் ஆயுதங்களைக் களையவேண்டுமெனக் கூறியது. ஆனால் அரசாங்கம் இது தொடர்பில் எதுவும் செய்யவில்லை.

மனித உரிமைகள், மனித பாதுகாப்பு நிலைமைகள் இன்னும் மோசமாகவே உள்ளன. வாழ்வின் சகல அம்சங்களிலும் இராணுவம் தலையிடுகின்றது. சிவில் நிர்வாகம் தொழிற்படுவதற்கு இராணுவம் தடையாக உள்ளது. அரச, தனியார் நிலங்களை அரசாங்கம் கையகப்படுத்தி பயன்படுத்துகின்றது. மக்கள் மீள்குடியேறவேண்டிய இடங்களில் இராணுவக் குடியிருப்புகளை அமைத்து வருகின்றது. இராணுவ மயப்படுத்தலினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டவர்களாக மக்கள் உள்ளனர். ஜனநாயக ரீதியாக இலங்கை தமிழ் மக்கள் வெளிப்படுத்திய கருத்துக்களை அரசாங்கம் புறக்கணித்தே வந்துள்ளது. வடக்கு, கிழக்கின இன கட்டமைப்பை திட்டமிட்டு மாற்றும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. அரசாங்க சேவையில் தமிழர்கள் திட்டமிட்டு புறக்கணிப்படுகின்றனர். மேற்படி பாதகங்களை நீக்கும் வகையில் வடக்கு, கிழக்குக்கு அரச அதிகாரம் வழங்கப்படுவது அவசியம். அரசாங்கம் ஜனவரி 2012 இல் இருபக்க பேச்சுவார்த்தையிலிருந்து ஒருதலைப்பட்டசமாக விலகியுள்ளது. பிரிக்கப்படாத, ஐக்கிய இலங்கையினுள் நியாயமான நடைமுறைச் சாத்தியமான நிலைத்திருக்கக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றினை உருவாக்க வேண்டுமென்பதில் நாம் உறுதியோடு உள்ளோம்.

ஜெனிவாவில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் சபையின் அமர்வில் இலங்கை அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிகளை நடைமுறைப்படுத்த இதுவரை ஏதும் செய்யவில்லை எனவும் அது பொறுப்புக் கூறும் விடயத்தை கருத்திலெடுத்து செயற்படவேண்டும் எனவும் கூறும் ஒரு தீர்மானம் வரவுள்ளது. ஆணைக்குழுவின் சிபாரிசுகளை இலங்கை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பை இந்த தீர்மானம் கொடுக்கவல்லது. இதன் மூலம் தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகள் மெய்ப்படுமென நம்புகின்றோம் எனவும் கூட்டமைப்பின் தலைவர் அக்கடிதத்தில் எழுதியுள்ளார்.

## வடக்கில் தாய் சேய்...

பணிப்பாளரிடம் கையளித்தார். இந் நிகழ்வில் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஆளுநரின் செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

• யாழ் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட உபகரணங்களை பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பழை, வல்வெட்டித்துறை, அச்சுவேலி, சண்டிலிப்பாய், கோப்பாய், சங்கானை ஆகிய வைத்தியசாலைகளுக்கு வழங்கியதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டம் கிளிநொச்சியில் ஏற்பாடுகள் தீவிரம்

(கிளிநொச்சி)


எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ள 2012 ஆம் ஆண்டுக்கான தமிழ் சிங்கள புதுவருட தினத்தை முன்னிட்டு வடமாகாணத்தின் பாரம்பரியங்களை உள்ளடக்கிய வகையில் விளையாட்டுக்கள் மற்றும் கலை நிகழ்வுகளை நடத்துவதற்கு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையும் கிளிநொச்சி மாவட்ட செயலகமும் இணைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்துவதற்கான ஏற்பாட்டுக் கூட்டம் கடந்த மாதம் 28 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டம் அரசாங்க அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிக செயலாளர் நீக்கிலாப்பிள்ளை, இணைப்புச் செயலாளர் கலாநிதி எஸ்.மோகன், ஊடகத துறைச் செயலாளர் மற்றும் மாவட்ட சமூக மேம்பாட்டு உத்தியோகத்தர் உமாநாத், மேலதிக அர சாங்க அதிபர் எஸ்.ஸ்ரீநிவாசன், அரசசார்பற்ற பிரதிநிதிகள், பிரதேச செயலர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், விளையாட்டு அலுவலர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

மேலும் கூட்டத்தில் பாரம்பரிய விளையாட்டுக்களான மாட்டுவண்டிச் சவாரி, கைக்கொடிச் சவாரி, கிட்டியடித்தல், சாக்கோட்டம், கிளித்தட்டு, பழம் பொறுக்கல், கயிறிழுத்தல், மரதன் ஓட்டம், சைக்கிளோட்டம் போன்ற நிகழ்வுகளுடன் கலை நிகழ்வுகள் உள்ளூர், வெளியூர் கலைஞர்கள் இணைந்து இசைக் கச்சேரிகளும் நடைபெறவுள்ளது.

அத்துடன் மேற்படி நிகழ்வுகளை நிறைவேற்றுவதற்கான குழுக்களும் அவற்றுக்கான ஒழுங்கமைப்பாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (142)

# நிரந்தரக் காணியின்றி மானிப்பாய் தபாலகம்



(யாழ்ப்பாணம்)

மானிப்பாயிலுள்ள தபாலகம் சொந்த இடமில்லாமல் கடந்த 80 வருட காலமாக தனியார் கட்டடங்களில் மாறி மாறி செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக மானிப்பாயிலுள்ள கட்டடம் ஒன்றில் இது இயங்கி வருகின்றது. இந்தக் கட்டடத்தை விட்டுத் தருமாறு உரிமையாளர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த மாதத்துடன் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் பகுதி மக்களுக்குச் சிறந்த சேவையாற்றி வரும் இத்தபாலகம் மீண்டும் இப்பகுதியிலிருந்து சேவையாற்றுவதற்கு இடவசதியில்லையென்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்பகுதி நலன் விரும்பிகள் யாராவது முன்வந்து காணியொன்றை இலவசமாக வழங்கினால் தபால் திணைக்களம் நிரந்தர கட்டடமொன்றை அமைத்துக் கொடுக்கும் என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்களுக்கான சேவையை வழங்குகின்ற அரச திணைக்களம் ஒன்றுக்கு கட்டடம் அமைக்க மக்கள் தமது காணியை இலவசமாக வழங்க வேண்டுமா என பொது மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

# கொள்ளுப்பிட்டியில் தமிழ்ப் பெண் கொலை சந்தேகத்தில் 2 ஆவது கணவர் கைது



(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி விடுதி அறையொன்றில் தமிழ்ப் பெண் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நேற்றுக் காலை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், கொள்ளுபிட்டி 5 ஆம் குறுக்கு வீதியில் வசிப்பவர் என்றும் குறித்த நபரை உயிரிழந்த அப்பெண் இரண்டாவதாக திருமணம் செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியாவில் கணவருடன் வாழ்ந்து வந்த 48 வயதான சுதர்ஷினி சஹீலா, கணவரால் கைவிடப்பட்டதையடுத்து இலங்கைக்கு வந்துள்ளார்.

இந்நிலையில், கொள்ளுப்பிட்டியில் தமிழ் இளைஞன் ஒருவரை இரண்டாவதாக திருமணம் செய்து, இருவரும் விடுதியில் தங்கியிருந்த போதே, தனது இரண்டாவது கணவனால் கழுத்து வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் நகைகள், பணம் என்பன பாதுகாப்பாக இருப்பதாகவும் பணத்திற்காக கொலை செய்யவில்லை என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இக்கொலைச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சுனாமியால் வீடுகளை இழந்தவர்களுக்கு திருமலையில் அடுக்குமாடி வீடு கையளிப்பு



(திருகோணமலை)

திருகோணமலையில் 120 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நெல்சன்புரம் மாடி வீட்டுக் கட்டடத் தொகுதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தார்.

நான்கு மாடிகள் கொண்ட இந்தக் கட்டடத் தொகுதியில் 80 வீடுகள் அடங்குகின்றன. சுனாமி அனர்த்தத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு இந்த வீடுகள் வழங்கப்பவுள்ளன. சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி உட்படப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நெல்சன்புரம் நெற்களஞ்சியத் தொகுதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் திறந்த வைத்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நெல்சன்புரம் மற்றும் ஜமாலியா பகுதிகளில் 6 களஞ்சியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1500 மெட்ரிக் தொன் நெல் களஞ்சியப்படுத்தக்கூடிய 2 களஞ்சியங்கள் மெட்ரிக் தொன் 550 மற்றும் 500 கொள்ளளவிலான களஞ்சியங்களும் 375 தொன் அளவிலான களஞ்சியங்கள் இரண்டும் இப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

கிழக்கின் உதயம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்திற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 16.9 மில்லின் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

# ஆளும் கட்சிக்கு தாவல்



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஜயந்த விஜயசேகர அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கப்போவதாக தெரிவித்துள்ளார்.

இவர் நேற்று முன்தினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவைச் சந்தித்து தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இவர் சில மாதங்களுக்கு முன்னர் மக்கள் விடுதலை முன்னணியில் (ஜே.வி.பி) இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார். இவர் கடந்த காலங்களில் மக்கள் சுதந்திரத்துக்கான அமைப்புடன் தொடர்பு வைத்திருந்தமை தெரிந்ததே.

# அரசின் உத்தியோகபூர்வ இலத்திரனியல் சஞ்சிகை

(கொழும்பு)

அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ 'news.lk' இன் சிங்கள மொழி இணையத்தளத்தில் இலத்திரனியல் சஞ்சிகை ஒன்று நேற்று தகவல் ஊடகத்துறை பதில் அமைச்சரும் அமைச்சரவை பிரதிப் பேச்சாளருமான அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. நாட்டில் வேகமாக நடைபெற்றுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் இந்த சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளன.

இணையத்தளமொன்றில் அபிவிருத்தி தொடர்பான தகவல்கள் கொண்ட இலத்திரனியல் சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட்டது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பல்கலையில் மோதல் மூவர் மருத்துவமனையில்

(கொழும்பு)

ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த இரு மாணவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த மாணவர்கள் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நுகேகொடை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

எனினும் இம் மோதல் தொடர்பாக மாணவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

# புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களின் கடன் வசதிக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு சுய தொழிலில் ஈடுபடுவதற்கான கடன் வழங்கும் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது தெரிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் படி வடக்கு, கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 10,375 இளைஞர் யுவதிகளுக்கு தலா இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் இந்த திட்டத்தின் கீழ் அரச வங்கிகள் ஊடாக கடன் வழங்கப்படவுள்ளது.

பத்து வருடங்களில் திருப்பிச் செலுத்தும் அடிப்படையில் இந்த கடன் வசதிகளை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

# பால்மாவுக்கு அதிக விலை வர்த்தகர்களுக்கு அபராதம்

பனடோல் மற்றும் பால்மா பொருட்களின் விலைகளை நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக விற்பனை செய்த 3 வர்த்தகர்களுக்கு 10500 ரூபா அபராதம் யாழ். நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

கல்வியங்காடு மற்றும் பருத்தித்துறை பகுதிகளில் பாவனையாளர் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே மேற்படி 3 வர்த்தகர்களும் குற்றஞ்சாட்டப்பட்டு நேற்று நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கு இணங்க யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா ஒவ்வொருவருக்கும் தலா 3500 ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்தார். (எஸ்)

# கப்பம் பெற முயற்சித்தவர்கள் கைது

மாகொல பிரதேசத்தில் நபர் ஒருவரை கொலை செய்யப் போவதாக அச்சுறுத்தி, 2 மில்லியன் ரூபாவை கப்பமாக பெற முயன்ற குற்றச்சாட்டில் இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவ்விருவரும் மேற்படி நபருக்கு 5 தடவைகள் தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுத்ததாகவும் இவர்கள் அப்பகுதியிலுள்ள மத்திய வகுப்பு குடும்பங்களை அச்சுறுத்தி கப்பம் பெறுவதில் ஈடுபட்டுவந்த குழுவொன்றுடன் தொடர்புடையவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி சந்தேக நபர்கள் இருவரிடமும் பாதிக்கப்பட்ட நபர் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை சப்புகஸ்கந்த பகுதியிலுள்ள சியபலாபே சந்தியில் வைத்து நேற்று முன்தினம் கையளிக்க முயன்றபோதே கைது செய்யப்பட்டார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.